70

# ஜகன் மோகினி

துன்முகி ௵ மாசி ௴ 1—3—57 அனு நாள்கு.

## நக்ஷத்ர மண்டலம்

M. மைனாவதி
பேசுகிறார்.

மலர் 34. இதழ் 3.

3 - APR 1957
MADRAS



3C
N57.343
183206




# ஜகன்மோகினி




ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி


மார்ச் 1957. மலர் 34, இதழ் 3. துன்முகி ஞு மாசி மீ


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தலைவலிபோதுமே, திருகு வலி வேண்டாமே —V.K.பார்த்தசாரதிஐயங்கார் | 1 |
| பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 5 |
| ஆண்டையும், அடிமையும் —சின்ன ரங்கா | 7 |
| எங்களது இன்பச் செலவு —T. S. ராஜகோபாலன் | 9 |
| வாழ்வின் மர்மம் —P. S. அரவிந்தா | 13 |
| ஹிந்து சட்ட மாறுதல்கள் —P.M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 17 |
| காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி ஸாஸ்திரி | 22 |
| நக்ஷத்ரமண்டலம் M. மைனாவதி பேசுகிறார் —சாரக்ராகி | 25 |
| நான் கண்ட அமெரிக்கா —ஆதூரி | 30 |
| வை.மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பம் —வை.மு. விஜயலக்ஷ்மி | 161-176 |
| எனது முதல் வெற்றி —பண்டித திருவாலி ராமானுஜாசாரியார் (ராப்பர் 3ம் பக்கம்) | |



The following particulars regarding the ownership of the 'Jagan Mohini' the monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

**FORM IV**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | ... | Triplicane (Madras-5.) |
| 2. | Periodicity of its Publication | ... | Monthly |
| 3 & 4. | Printer's & Publisher's Name | ... | V. M.Parthasarathy |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | 26, Car Street, Triplicane, Madras-5. |
| 5. | Editor's Name | ... | Mrs. V. M. Kothainayaki |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | 26, Car Street, Triplicane, Madras-5. |
| 6. | Names and addresses of individuals who own the newspapers | ... | do |

I, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. M. Parthasarathy,
*Publisher.*

*Dated 1st March 1957*

**வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், B.A.B.L,**

70
2-5

# தலைவலி போதுமே, திருகுவலி வேண்டாமே!

"தேரான் தெளிவும் தெளிந்தாண்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போன்ற நிலையிலுள்ளது நமது அரசாங்கத்தின் இன்றைய நிலை.

சென்னை மாகாணத்தில், மார்ச்சு மாதம் முதல் தேதி முதல்பதினேழுந்தேதிவரை, தேர்தல்கள் நடந்தேறப்போகிறது. மக்கள், தமது வாக்குரிமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய பருவகாலம் அது.

தேர்தல் காலம் நெருங்க நெருங்க, வாக்குரிமையை யாருக்கு வழங்குவதென்ற குழப்பமே வாக்காளரிடை மிகுதிப்பட்டு வருகிறது. ஆங்கிலேயரை யகற்றி சுதந்திர ஆட்சி ஏற்றது காங்கிரஸ் கட்சி, அதுவே நமது வாக்குரிமை வாங்க வல்லது. இதைப்பற்றி என்றும், எவர்க்கும், எவ்விடத்தும் எவ்வித சந்தேகமோ, குழப்பமோ எழுந்திடச் சிறிதுங் காரணமே யில்லை.

ஆயின் குழப்பமேன்?—காந்தி மகானே நமக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த தந்தை. தனது அரசியன் மகன்களாக நேருவையும் ராஜாஜியையும் வைத்துச் சென்றார். மத்திய சர்க்காரிலும், சென்னை மாகாணத்திலும், மற்றும் இந்தியா முழுவதற்கும், உலகு முழுவதற்குமாகவே சாந்தியும், சுதந்திரமும் நிலவிட உழைக்கின்றனர் காந்தியின் இவ்விரு புதல்வரும்.—ஆயினும், குடும்பமென்றால், பல்வேறு மனப்பான்மை கொண்ட மக்கள் வந்து கூடுவது சகஜந்தான். அதுபோலவே இன்றைய காங்கிரஸ் குடும்பமும், பின் வந்து சேர்ந்த தனது பல்வேறு மக்களால் அல்லலுருவதாகிறது.

இக் காங்கிரஸ் குடும்பத்திலிருந்து, பல்வேறு காரணங்களால் வெளியேறி, சுயநல காரணமாய் வேறு கட்சிகளெழுப்பியோர் பலர். வேறு கட்சிகளினின்றும் காங்கிரஸ் கட்சியில் புகுந்தோர் பலர். வெளியேறியோர் திரும்பவும் உட்புகுந்துளர் சிலர். இம்மாதிரி நிலையில், எக்குடும்பமும் தடுமாறித்தான் போகும். ஸேதுபதி நியமனம் பற்றி நடந்தேறிய ஊழல் பேச்சுக்கள் நின்று, காமராஜர் தேர்தல் பற்றிய ஊழல் பேச்சுக்கள் மலிந்துள்ளன. ஐயம் பேட்டை சண்டை யென்பார்களே அதுபோலக் காண்கி

கிறது. ஈ. வே. ரா.—காமராஜரைத்தான் ஆதரித்தாக வேண்டுமென்று பிரசாரம் செய்வதும், காமராஜர் அவர் ஆதரவு வேண்டாமேயென மறுத்தளிப்பதுவும்,—உண்மை மர்மம் அவர்களுக்குத்தான் தெரியவரும். எனினும், காங்கிரஸ் கட்சியின் மதிப்பை இப்பேச்சுக்கள் மிகுதியும் பாதித்து, தேர்தல் காலத்தில் வாக்காளர் மனதை மிகுதியும் கலவரப்படுத்தத்தான் செய்கிறது.



எனவே, இன்று ஒவ்வொரு வாக்காளரும் கேட்கும் கேள்வி—நாளைத் தேர்தலில் நான் யாருக்கு ஓட்டுப் போடுவது?—எவருக்குமே ஓட்டுப் போடாதிருந்து விடட்டுமா?—என்பதுதான்'

இந்தக் கேள்விகள் அனாவசியமே. வரும் தேர்தலில் நமது ஓட்டு காங்கிரசுக்குத்தான் என்ற திடத் தீர்மானத்தை எந்த வாக்காளரும் மறக்கலாகாது. கட்சியில் வந்து போவோராது ஊழல்களுக்காகக் கட்சியையே ஊழலெனப்பழிப்பது நியாயமா?—. இந்த மர்மம் மறந்து, காங்கிரசுக்கு ஓட்டுப்போடாமல் சும்மாயிருந்தோ, வேறெந்தக்கட்சிக்காவது ஓட்டுப் போட்டோவிட்டால், தலைவலிபோய், திருகுவலி சம்பாதித்துக்கொண்டவரேயாவோம்.

தலைவலியை சரீரத்தினின்றும் விலக்கிக்கொள்ள வேண்டிய வழிகளை, காங்கிரஸ் கட்சியைத் திரும்பவும் ஆட்சிப் பதவியில் அமர்த்திய பின்னமே நாம் தேடவேண்டும்—. சரீரத்தில் தலைவலி கண்டதேயெனத் தலையையே சீவிட முன்வருவாருண்டோ?.

சுதந்திரம் பெற்றக்காலே காந்திமகான் சொன்னார்—'காங்கிரஸ் என்பது லோகசேவைக்கானதோர் சங்கமே. ஆட்சிக்கட்சிக்கு அப்பெயர்வைத்துச் சுதந்திர அரசாங்கம் நடத்துவது மதியீனமே. ஆகவே காங்கிரஸ் கட்சியாரம்பித்து அது செய்த சேவையாம் சுதந்திரம் பெற்றுவிட்டதால் அக்கட்சியைக் கலைத்து, அதே சேவைக்காக லோக சேவா சங்கம்' என்ற பெயருடன் அதை வளருங்கள்.




என்றார். அவர் பேச்சை எவரும் மதிக்கவில்லை. ஆவடி காங்கிரஸில் ஆரம்பித்த சமதர்ம சமூகஸ்தாபன முயற்சி, இப்பொழுதுதான் காந்தி நினைவுகொண்டு, சர்வோதயக் கனவுகாண்கிறது. சுத்தமான, சுயநலம்பேணாத, சுயலாபக்யாதி அபேக்ஷிதமில்லாதாரைக் கொண்ட காங்கிரஸ் கட்சி, ஆட்சி பதவியிருந்தக்காலே இதெல்லாம் நலம்பெற

நடைபெறும். அவ்வழிகளைத் தேர்தல் முடித்து, காங்கிரசை அதிகாரநிலைவைத்து, அதற்க்கப்புறமே அதனைச்சீர்மையும், நேர்மையும், தாய்மையுங்கொண்டிட நாம் முயற்சிக்கவேண்டும். தேர்தலன்று காலையில், நமது இன்றைக் கடன், காங்கிரஸ் கட்சிக்கே கண்மூடித்தனமாகவேனும் ஓட்டுப் போட்டு, அது பதவிக்கு வந்ததும், கண்களைத்திறந்து கொண்டு, அதனைச் சீர்திருத்த முயலுவதே எக்காரணங் கொண்டேனும், சற்றேனும் ஏமாந்தோ, பிறர்பேச்சு கேட்டோ, பிறர் கைபார்த்தோ, நமது சுயேச்சையைக் கைவிட்டுக்கடமையை மறந்து காங்கிரசுக்கு ஓட்டுப்போடாதுபோவோமாகில், தலைவலி போக்க எண்ணித் திருகு வலியே சம்பாதித்து, சுதந்திர ஆட்சியையே அகற்றிடவே அடிகோலுவோமாவோம்: சுவர் வைத்துக்கொண்டல்லவா சித்திர மெழுதவேண்டும்: காங்கிரசைப் பதவிக்குக் கொணர்ந்த பின்னரல்லவா அதனைச் சீர்திருத்தக்கூடும்: எனவே யோசனையின்றி, காங்கிரசுக்கே உங்கள் ஓட்டுக் களைக் கொடுங்கள்.

"தேறற்க யாரையும் தேராது. தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்"

---

# மட்டுப்பெட்டிக்கே
# வோட்டு போடுங்கள்



நாடு செழிக்க—நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ—
வேலையில்லா திண்டாட்டம் ஒழிய—நேருவின் புஜத்தை
பலப்படுத்த காங்கிரஸ் ஸ்தாபனம் செழித்தோங்க--
அரசாங்கம் ஓங்க

183206

# பகவத்கீதைக் குறிப்புகள்

ஸ்ரீராஜாஜி

## பதினோராவது அத்தியாயம்

**சுலோ: 1-4**

அர்ஜுனன் ஈசுவரதரிசனம் பிரத்யக்ஷமாக அடைய விரும்புகிறான்.

**சுலோ: 5-8**

"பார்! உலகம் எல்லாம் என் தேகத்தில் இருப்பதைப் பார்! சகலமும் நான் என்பதைப் பார்! ஆனால் உன் கண்கள் இந்தக் காட்சியைத் தாங்காது. ஆகையால் உனக்கு திவ்ய பார்வை தருகிறேன். அதைக்கொண்டு பார்ப்பாய்!" என்றான் கண்ணன்.

**சுலோ: 8-14**

அதன்மேல் பகவான் விசுவரூபத்தைக் காட்டினான். சஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு அதை சங்கிரகமாக வர்ணிக்கிறான். ஆயிரம் ஞாயிறுகள் ஒரே கணத்தில் ஆகாயத்தில் உதயமாகிப் பிரகாசித்த மாதிரி பகவான் அந்த விசுவரூபத்தில் ஜொலித்தான். உலகம் எல்லாம் ஒன்றாக அந்த வடிவத்தில் அர்ஜுனன் கண்டான்.

**சுலோ: 15-31**

இந்தச் சுலோகங்கள் அந்த விசுவரூபத்தைக் கண்டு பிரமித்துப் போன அர்ஜுனனுடைய வாக்கு. உலகம் அனைத்தையும், உலக நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருமிக்க ஒரு மூர்த்தியாகக் கண்டான். அந்த உக்ரரூபத்தை வர்ணித்து "இதை என்னால் சகிக்கமுடியவில்லை" என்கிறான்.

**சுலோ: 32-34**

இந்தச் சுலோகங்கள் நம்மை மறுபடி பாரதப் போருக்குக் கொண்டு செல்லுகின்றன. இவற்றை நாம் இங்கே படித்துக் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை.

**சுலோ- 36-46**

இந்தச் சுலோகங்களில் பார்த்தன் பகவானை வாயாரத் துதிக்கிறான். "கண்ணனே! உன் விசுவரூபத்தை இன்று கண்டேன். நான் உன்னை என்னவோ என்று இது வரையில் எண்ணி வந்தேன். என்னை க்ஷமிக்கவேண்டும். உன் சௌலப்யத்தால் ஏமாந்து போயிருந்தேன். இப்போது உண்மையை உணர்ந்தேன்!" என்கிறான்.

"இந்த விசுவரூபத்தை என்னால் சகிக்க முடியவில்லை. உன் மானுஷ மங்களரூபத்தைக் காட்டியருள்வாயாக!" என்கிறான். அவ்வாறே பகவான் செய்கிறான்.

இங்கே நாம் கவனிக்கவேண்டியது :

உலகமனைத்தும் அவனே என்பது உண்மையாயினும், அந்த உண்மையை நேரில் மனிதர்களாகிய நாம் கண்டு சகிக்கமுடியாது. மனத்திலும் தியானித்து அனுபவிக்கவும் இயலாது. பொருள்களை வேறுவேருகவும் இன்ப துன்பங்களை வேறுவேருகவும்தான் நம்முடைய மானுஷ உணர்ச்சி சகிக்கமுடியும். முழு உண்மையின் தேஜோ ரூபத்தை நம்முடைய மனமாவது கண்களாவது தாங்காது.

இதனுலேதான் அறிவைக்கொண்டு அத்துவைதத்தை ஒருவாறு கண்டு உணர்ந்துவிட்டதாக எண்ணினுலும், தியானத்துக்குப், பூஜைக்கும், வழிபாட்டுக்கும் சௌம்ய வடிவங்களையே நாடுகிரும். உலகத்தில் பக்தர்கள், எந்த சமயத்தினர் ஆயினும், அனைவரும் எவையேனும் ஒன்று அல்லது பல சௌம்ய வடிவங்களை வைத்துக் கொண்டு தான் ஆராதிக்கிருர்கள். அவர்களுக்கு வழிகாட்டியவர்கள் அத்துவைதத்தை அறியாதவர்கள் அல்ல. அறிந்தே இப்படிச் செய்யச் சொல்லியிருக்கிருர்கள். இதைத்தான் அர்ஜுனனுடைய வாக்கின் மூலமாகக் கீதை உபதேசிக்கிறது.

சுலோ : 55

“என்னை நீ கண்டாய். இந்தக் காட்சியை வேறு யாரும் கண்டதில்லை!” என்று தன் விசுவரூபத்தைப் பற்றி சொல்லிவிட்டு, ஒரு சுலோகத்தில் தன்னுடைய உபதேசம் முழுவதையும் சேர்த்துச் சொல்லுகிருன் :

“எதையும் பகவானுக்காகச் செய்; அடையவேண்டிய நன்மை பகவானே என்று பக்தி செலுத்தி, வேறு பற்றுக்களை ஒழித்துவிட்டு, எந்தக் காரியத்தையும் செய்; எந்த மனிதனையும் எந்தப் பிராணியையும் துவேஷிக்க வேண்டாம்; நீ ஆண்டவனை அடைவாய்!”

இதுவே கீதாசாரம் என்கிருர் சங்கராச்சாரியார். கீதை இறுதியில் பதினெட்டாவது அத்தியாயம் அறுபத்தைந்தாவது சுலோகத்தில் மறுபடியும் இது சொல்லப் படுகிறது. விசுவரூபம் காட்டியபின் சொல்லிய இந்தப் பதிஞேராவது அத்தியாயம் ஐம்பத்தைந்தாவது சுலோகமும், பதினெட்டாவது அத்தியாயம் அறுபத்தைந்தாவது சுலோகமும் கூட்டி கீதாசாரத்தை நம்மாழ்வார் “வீடுமின் முற்றவும்” என்கிற இரண்டாம் திருவாய்மொழியில் உபதேசிக்கிருர்.

இந்தப் பதிஞேராவது அத்தியாயத்தில் காட்டப்பட்ட விசுவரூபத்தைப் பற்றி மறுபடியும் சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குக் கீதைக் கடைசியில் எடுத்துச் சொல்லுகிருன் : (பதினெட்டாம் அத்தியாயம் எழுபத்தேழாவது சுலோகம்).

# ஆண்டையும் அடிமையும்

ஸ்ரீமதி சின்ன ரங்கா

அன்றும் வழக்கம்போல் புதுச்சேரியில் கடற்கரைக்குப் போனோம். பியர் வாராவதிமேல், பாரதி, ஐயர் என் தகப்பனார். (ஸ்ரீ ஸ்ரீ ஆசார்யார்) முன் செல்ல, என் தாயார், செல்லம்மாள், என் தமக்கைகள் பின் தொடர நானும் சகுந்தலாவும் கை கோர்த்துக் கொண்டு அங்கு மிங்கும் பார்த்தவாறு ஆனந்தமாய் சென்றோம். ஆனால் அந்த ஆனந்தம் நீடித்திருக்க வில்லை. அன்று மணிலாக் கொட்டை (வேர்க்கடலை) மூட்டைகள் ஏற்றுமதி இறக்குமதி காரணத்தால் ஹார்பரில் வெகு கூட்டமாக இருந்தது. வெள்ளை துரைமார்கள் "ஹாட் பூட்டென்று" கறுப்பு இந்திய கூலியாட்களை கடினமாய் வேலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். வேலை முடிந்ததும் கூலியாட்கள் துரைகளை பரிதாபமாக "ஆண்டே! கூலி குடுங்க ஆண்டே எங்கள் வீட்டில் குழந்தை குட்டிகளெல்லாம் பட்டினி. நாங்க போய் தான் அரிசிவாங்கணும்" என்னும் கதறல் அங்காங்குகும்பல் கும்பலாய் நிற்கும் கூலியாட்களிடமிருந்து கேட்டது. துரைமார்கள் அலட்சியமாக சுருட்டு பிடித்துக் கொண்டிருக்க மறுபடி "ஆண்டே காப்பாத்துங்க ஆண்டே" என்று கல் மனமும் கரையும்படி கூலியாட்கள் கூக்குரலிட்டார்கள். அந்த காலத்தில் வேலையாட்கள் நாய்களிலும் கடுமையாக மிகவும் கேவலமாக நடத்தப்பட்டார்கள். சில துரைமார்கள் தங்கள் பூட்ஸ்கலால் உதைத்து காயம்கூட உண்டாக்கி விடுவார்கள். அதைப்பற்றி கேள்வி முறை கிடையாது. இந்தக் கடற்கரை கூலிகளின் பரிதாபக் குரல் எனக்கும் சகுந்தலாவுக்கும் கண்களில் நீரை வருவித்து விட்டது. நான் அவள் கையைப் பிடித்து இழுத்து "வாம்மா நாம் அப்பாகிட்ட ஓடிப்போலாம் அங்கே போய் இந்த வெள்ளைக்காரன்களை எல்லாம் நன்றாய் உதைக்க என்ன பண்ணுவது என்று யோசிக்கலாம்" என்றவாறு எங்கள் தகப்பனரும் ஐயரும் ஒதுக்குபுறமாக உட்கார்ந்திருந்த இடத்தை யடைந்தோம். எங்களைப் பார்த்த பாரதி சிரித்துக்கொண்டே "ஏனம்மா உங்களுக்கு பயமாய் விட்டதா. முகமெல்லாம் என்னமோ போல் இருக்கிறதே" என்றார். இதற்குள் பின்னால் வந்த என் அக்கா ஆண்டாள், "அங்கே கூலிகளெல்லாம் வெள்ளைக்காரனை சுற்றி கூலிக்காக அழுது கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க சகிக்காமல் இவா

ரெண்டுபேரும் வேகமாய் வந்துவிட்டார்கள். "ஆண்டே என்றால் என்ன பாரதி"?

"ஆண்டே என்றால் எஜமானனே! சுவாமியே' என்று அர்த்தம்."

"ஐயோ இந்த வெள்ளைக்கார தடியன்களையா ஆண்டே ஆண்டே என்று கூப்பிடணும், பெருமைக் கூப்பிட்டாலும் அவர்கள் பாபமாவது போகுமே."

பாவம் அந்த பாமர ஜனங்களுக்கு என்னம்மா தெரியும். எவன் பணம் குடுக்கிறானோ அவன்தான் தெய்வம் என்று நினைக்கும் பேதைகள் அவர்கள். நம்மைப் போன்றவர்கள்தான் வருங்காலத்தில் அவர்கள் அடிமைத் தனத்தை நீக்க வேண்டும். எல்லோருக்கும் ஒரே ஒரு ஆண்டவன்தான் என்பதை அவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? அந்த ஆண்டே என்ற பதத்தையே வைத்து நான் ஒருபாட்டு கட்டுகிறேன் கேளுங்கள்" என்று சொல்லி பாட ஆரம்பித்தார். ஆஹா! அந்த கடற்கரையிலே ஜிலு ஜிலு என்று காற்று வீச, அலை ஹோ! என்று சுருதிகூட்ட அவர் வாயிலிருந்து கம்பீரமாக பாட்டு கிளம்பிற்று.

**(கண்ணன் என் ஆண்டான்)**

தஞ்ச முலகினில் எங்கணு மின்றித்  
தவித்துத் தடுமாறி

பஞ்சைப் பறைய னடிமை புகுந்தேன்,  
பார முனக் காண்டே;  
ஆண்டே—பாரமுனக் காண்டே.

துன்பமு நோயு மிடிமையும் தீர்த்துச்  
சுகமரு ளல் வேண்டும்;

அன்புட னின்புகழ் பாடிக்குதித்து நின்  
ஆணை வழி நடப்பேன்;  
ஆண்டே—ஆணை வழி நடப்பேன்.

மெய் சிலிர்க்க பொழுது போவதே தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்தோம். அந்த ஆண்டவனை எங்கள் எதிரில் கொண்டுவந்து நிறுத்தி விட்டார் பாரதி. அவர் பாட்டு முடிந்ததும் எல்லோரும் மனம் நிறைந்த சாந்தியுடன் வீடு சென்றோம். இன்னும் அந்த கடற்கரை காட்சி என் மனதைவிட்டு அகலவேயில்லை. கண்ணன் படத்தைப் பார்க்கும்போதெல்லாம் இந்த பாட்டை அவர் அன்று பாடின ராகத்தில் நான் ஒருதரமாவது பாடாமலிருப்பதில்லை.

# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன், பி.ஏ., எல்.டி.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

## 3. பிரபாஸ் பட்டணம்.

மறுநாட் காலை அருணோதய சமயத்தில் ரயில் வண்டி ஜுனகாத் சேர்ந்தது. இது ராஜ்கோட்டிலிருந்து சுமார் 60 மைல் தொலைவிலுள்ளது. ஜுனகாத் என்ற பதத்தின் பொருள் "பழங் கோட்டை" என்பதாம். இது புராதன மான நகரம், அருகில் கிர்நார் மலை (Girnar Hill) உள்ளது; இதிலுள்ள காடுகளில் சிங்கம், புலி, கரடி முதலியன வாழ் கின்றன. ஜுனகாத்தில் இந்து ஆலயங்களும் ஜைன ஆல யங்களும் பல திகழ்கின்றன. வாகேச்வரி ஆலயத்திற் கரு கில் 30 அடி நீளம், 20 அடி அகலமுள்ள பெரும் பாறை யொன்றில் அசோகரது பதினான்கு ஆணைகள் பாளி மொழியில் பொறிக்கப்பெற்றுள்ளன. இவை பற்றிப் பரக்கக் கூறிவந்தனர், உடன் வந்த பழைய மாணவர்கள்.

ஜுனகாதிலிருந்து சுமார் 40 மைல் தெற்கே யுள்ளது வெராவல் என்ற ரயில் ஸ்டேஷன். தெற்கே போகப் போக இயற்கை வனப்பு, ஓங்கிவந்தது. ரயில் பாதையின் இரு மருங்கிலும் விளை நிலங்களும் மேய்ச்சல் வெளிகளும் மலிந்திருந்தன. வயல்களில் வாழை, கரும்பு முதலியன பயிராகி வந்தன. அடுத்துள்ள தோட்டங்களில் மரங்கள் பசுகு பசுகென்று விளங்கின. அன்று காலை கீழ்வானம் கறுத்து, இருண்டிருந்தது; கதிரவன் சிறிதேனும் கண் ணில் படவில்லை. 8-30 மணி சுமாருக்கு ரயில் வண்டி வெராவல் வந்தடைந்தது. கனத்த மழை பெய்ததால் நாங் கள் அரை மணி நேரம் வெளிக் கிளம்ப இயலவில்லை. மழை நின்றதும் ஆதவன் மகிழ்ந்து தோன்றினான்; நீர் வேய்ந்த நிலப் பரப்பும் எழில்கொண்டு இலங்கியது. நாங் கள் எங்களது மூட்டை முடிச்சுக்களை அண்மையிலுள்ள போஜன சாலை யொன்றில் வைத்துவிட்டு, டாங்காக்களில் ஏறிச் சென்றோம், பிரபாஸ் பட்டணத்தை நோக்கி.

வெராவல், ஒரு துறைமுகப் பட்டினம். ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அரை மைல் தூரத்திலேயே இங்குள்ள சிறு மரக்கலங்களின் கூம்புகளும் பாய்மரங்களும் தென் படுகின்றன. வெராவலிலிருந்து சுமார் 2 மைல் தொலைவி லுள்ளது பிரபாஸ் பட்டணம். இதில் ஹிரண்யா, கபிலா என இரண்டு நதிகளும், இவற்றிடையே ஸரஸ்வதி என்ற நதியும் ஒன்று கூடுவதால், இது த்ரிவேணி (வேணீ என்றால் நீ ரோட்டம்) எனப் பெற்று, புண்ணிய தீர்த்தமாகக் கருதப் படுகின்றது. இதில் க்ருஷ்ண பகவான் இருமுறை நீராடச் சென்றிருக்கிறார். புண்ணியத் தலமாதல் பற்றி இது பண்

டைக் காலத்திலேயே பிரபாஸ் (இதன் பொருள் "நன்கு விளங்குவது") எனப் பெயர்பெற்றது.

த்ரிவேணி காட் (நீராடுமிடத்திலிருந்து) என்ற இடத்திலிருந்து சுமார் 2 பர்லாங்க் தூரத்தில் தேஹோத்ஸர்ஜன் என்ற தலம் உள்ளது. தேஹ+உத்ஸர்ஜநம் என்பதன் பொருள் "சரீரத்தை நீத்தது" என்பதாம். இந்த இடத்தில் கண்ணன் தனது மானிட உடலை நீத்துத் தன் இருப்பிடமாகிய பரமபதம் சேர்ந்தான். இதுபற்றிய வரலாறு பின் வருமாறு :

முன்பு விச்வாமித்ரர், கண்வர், துர்வாஸர், ப்ருகு, அங்கீரஸர், கச்யபர், வாமதேவர், அத்ரி, வஸிஷ்டர், நாரதர் முதலாய முனிவரர்கள் பிண்டாரகம் என்ற தீர்த்தத்தருகில் கூடியிருந்தனர். யாதவ மரபில் தோன்றிய சிறு பிராயத்தினருள் சிலர், யௌவனத்தால் கர்வங்கொண்டு, தாம் செய்வது என்னவென அறியாமல், சிறு விஷமம் ஒன்று செய்தனர். அது யாதவ குலத்திற்கே நாசம் விளைவிப்பதாயிற்று. ஜாம்பவதியின் புதல்வனான ஸாம்பன் என்பவன் அவர்களுள் ஒருவன். அவனுக்குப் பெண் உடை உடுத்தி, சூலுற்ற பெண் போல் செய்து, அவனைத் தபோதனர்களிடம்நிறுத்தி அவர்களை அடிபணிந்து,'யாவற்றையுங் காணும் ஆற்றல் வாய்ந்தோர்களே! இந்தப்பெண்ணுக்குஎன்னகுழந்தைபிறக்கும்?''என்றுகேட்டனர்செருக்குடன்.மெய்ஞானிகளாகியமுனிவர்கள்கதங்கொண்டு,'மூடர்களே! உங்கள் குலத்தையே நாசம் செய்யும் உலக்கை ஒன்று பெறுவான் இவன்'' என்றார்கள். உடனே ஸாம்பனுடைய உதரத்திலிருந்து இருப்பு உலக்கை யொன்று கீழே விழுந்தது. இது கண்டு பயந்த யாதவ குமாரர்கள், நிகழ்ந்தவற்றை உக்ரஸேனனிடம் கூறினார்கள்; அவனும் அந்தஉலக்கையைப் பொடியாகச் செய்துஅந்த சமுத்திரத்தின் கரையிலேயே போடும்படி செய்தான். அந்த உலக்கையிலிருந்த சிறு துண்டத்தைக் கடல்மீன் ஒன்று விழுங்கியது; அதைப் பிடித்த வேடன், அதன் வயிற்றிலிருந்து அந்தத் துண்டை எடுத்துத் தன் அம்பின் நுனியில் அமைத்துக் கொண்டான். உலக்கையின் பொடி படிந்த இடத்தில் கோரைகள் மண்டின. இதையும் நிகழவேண்டுவதையும் நன்கு உணர்ந்த கண்ணன் விதிக்கு மாறாகச் செய்ய விரும்பாமல் வாளா இருந்துவிட்டான்.

பின்னர் ஒரு நாள், தேவர்களால் ஏவப்பெற்று, வாயு பகவான் கண்ணனைத் தனியே கண்டு, "கண்ணன் மண்ணுலகில் தங்குவதற்காகத் திருவுளங் கொண்டதைவிட அதிகம் தங்கிவிட்டதாயும், நித்தியமான நிலயத்திற்குத் திரும்பியருளுமாறு நித்ய சூரிகள் வேண்டிக் கொள்வதாக

வும் தெரிவித்தான். கண்ணனும் யாதவ குலத்தையும் அழித்து, பூமியின் பாரத்தை நீக்கி, விரைவில் மீளுவதாகக் கூறினன். மண்ணில் உத்பாதங்கள் பல தோன்றின. பக வான் யாதவர்களை அழைத்து, யாவரும் த்வாரகையை விட்டு ப்ரபாஸம் செல்லவேண்டும் என்றான். யாவரும் அங்கு ரதங்களில் ஏறிச் சென்றனர். அங்கு யாவரும் மயக்கம் தரும் பானம் ஒன்றைப் பருகிவிட்டு, தாம் செய்வதை அறி யாதவர்களாய் ஒருவரை யொருவர் நிந்தித்துக் கொண்டு, அம்புகளால் அடித்துக்கொண்டனர். அம்புகள் யாவும் செலவானபின்பு, அருகேயுள்ள கோரைகளைப் பறித்துத் தாக்கிக் கொண்டனர். முன்பு உதிர்க்கப் பெற்ற இரும்பு உலக்கைப் பொடியிலிருந்து முளைத்த இக் கோரைக் குச்சி கள் வலியுள்ள ஆயுதங்களாயின; யாதவர்கள் யாவரும் மடிந்தனர். பலராமன் சமுத்திர தீரத்தில் யோகத்தில் ஆழ்ந்தான்; அவனது வாயிலிருந்து பெரிய சர்ப்பம் ஒன்று கிளம்பிக்கடல் மத்தியில் சென்றது; அங்கு சித்தர்களும் உர கர்களும் அர்க்ய பாத்யங்களுடன் இந்த ஆதிசேஷனை வர வேற்று பூஜை செய்தனர்.

தன்னுடைய விருப்பத்தாலேயே மனிதப் பிறவி பிறந்த கருணைக் கடலாகிய கண்ணன், மனித சரீரத்தை நீத்துப் பரமான வைகுந்தத்திற்கு எழுந்தருளுவதற்காக, ஓரிடத்தில் ஸ்வஸ்திகாஸநமாக—இடது தொடையில் வலது திருவடியைப் பொருத்தி — சாய்ந்திருந்தான். அவனது திருத் தோள்கள் நான்கும் பணைத்துத் தோன்றின. அவ னது திருமேனியின் காந்தி, புகையில்லாத நெருப்புப் போல் மாசற்றதாக, திசைகளிலுள்ள இருளைப் போக் கிற்று. திருமுகத்தில் புன்முறுவல் பூத்தது; கறுத்த திருக் குழல் கற்றையும், அரையில் சாத்திய பொன்நாண், ஆரம், பொற் சிலம்பு, கடகம், தோள்வளை, தோளில் அணிந்த வனமாலை—முதலியனவும் அவனது திருமேனியின் எழி லைப் பன்மடங்கு பெருக்கின. வேடனொருவன் தொலைவி லுள்ள மானை அடிப்பதாக நினைத்துத் தன் அம்பை எய் தான்; அதுதான் பொடிசெய்த உலக்கையின் துண்டு பொருத்தப் பெற்றது. அந்த அம்பு கண்ணனது திருவடி யில் பாய்ந்தது. அவன் அங்கு நடுநடுங்கிச் சென்று, கண்ணனது திருவடிகளில் வேரற்ற மரம்போல் சாய்ந்து,

"அஜாநதா க்ருதமிதம் பாபேந மதுஸூதந! |
க்ஷந்து மர்ஹஸி பாபஸ்ய உத்தமச்லோக! மே(அ)நக! ||"

(மதுவைக்கொன்றவனே! மேலான கீர்த்தி வாய்ந்தவனே! குற்றமற்றவனே! அறியாத பாவியாகியஎன்னாலே இதுசெய் யப்பட்டது; இதை மன்னித்தருளவேண்டும்) என்றும், "இனி வேட்டையாடுவதாகிய தீச்செயலைச் செய்யாமல் இருக்கு

மாறு எனக்கு மேலான கதியை அருளவேண்டும்" என்றும் வேண்டிக் கொண்டான். கண்ணனும் அவனுக்கு அபயம் கூறி, அவனது வேண்டுகோளுக் கிணங்க அவனைப் பரமபதத் திற்கு அனுப்பினன். உலகம் உய்வதற்கே பிறக்கும் உத்தம மூர்த்தியாகிய கண்ணன், தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுவதைக் காணப் பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் கூடி, கண்ணன் வஸுதேவனது புத்திரனுகப் பிறந்து செய்த அருஞ் செயல்களையும் சில குணத்தையும் பாக்களாகப் பாடிக் களித்தனர். அவனுடைய சோதி, சூரிய மண்டலத்தைக் கீண்டு மேலே போவதைக் கண்டு வியந்த தேவர்கள், அவனைப் பலவாருகப் புகழ்ந்து, தமது இருப்பிடம் சேர்ந்தனர். உலகை எல்லாம் படைத்துக் காக்கும் பேராற்றல் வாய்ந்தவனுலும் அகற்ற முடியாத தொன்றுகும் பெரியோர்களுடைய சாபம் என்பதும், உல கில் பிறக்கும் அவனும் உலக வரம்பை மீறிச் செய்வ தொன்றுமில்லை என்பதும் இந்த வரலாற்றிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டுவன.

மாயன் தனது மனித சரீரத்தை நீத்த இந்த இடத்தில் ஓர் அரச மரத்தின் நிழலில் மேடை யொன்றில் அவனு டைய திருவடிகள் இப்போதும் விளங்குகின்றன.

விரிபுன லணை தரு முதுநகர் கெழுமிய
அரியணை யமர்திற லரியினை யவித்தவன்
விரிமலர் கவினுறு விழுமிய அடியிணை
அரிமுரல் பொழிலிடை யணுகின மாங்கே.

வெறிகொண்ட துளவத்தார் வனைந்திட்டுப் பவளத்தின்
முறிகொண்ட வதனத்தார் முறைசெய்ய நடைமேவி
உறிகொண்ட நறுவெண்ணெய் உண்டுகந்தா னடியிணையை
மறிமன்னு தடம்பொழில்வாய் மரநிழலில் வணங்கினமே.

விரஜைக்கு அப்பால் காலவரையில்லாத பெருநகரில் பை கொண்ட நாகத்தின் மிசை மேவிய பரம்பொருளின் சேவடியை, அன்று ஹிரண்யா ஆற்றின் கரையில், ஆதி சேஷனுருவாகிய மரத்தின் நிழலிலே சிறிது காலம் கண்டு வணங்கப்பெற்றோம் யாம். இந்த இடத்திற்குப் பாலக தீர்த்தம் எனப் பெயர். இதன் அருகிலுள்ள ஒரு கோயிலில் கண் ணனும் பலராமனும் எழுந்தருளியிருக்கின்றனர். அங்கு ஓரிடத்தில் கண்ணன் தனது சரம நிலையில் ஸ்வஸ்திகாஸ நத்தில் எழுந்தருளியிருந்ததுபோல் சாய்ந்த திருமேனி யோடு மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். இங்குள்ள மக்கள் ஒவ்வொரு மாதமும் சுக்ல பக்ஷ த்வாதசியன்று இங்கு வந்து நீராடிக் கண்ணனை வழிபடுகின்றனர்.

# வாழ்வின் மர்மம்

"ராஜா...ராஜா...இதோ பார். உன் வரப்போகும் ஆசை மனைவிக்கு வாங்கிவந்த சேலைகள். அவள் சிவந்த மேனியில் இந்த புடவை ஏறி, உன் பக்கத்தில் நின்றால் மன்மதன் ரதி போல் இருப்பீர்கள்" என்று வரும் மகராஜியை வர்ணித்தவாறு மகனைக் களிப்பித்துக் கொண்டே சேலைகளை கையில் கொடுத்தாள். அதற்குள் அடுப்பிலிருந்த பாலும் சந்தோஷத்தால் பொங்கி, தன் மணத்தை வீடு பூராவும் பரப்பியது. பாகீரதி ஓட்டப் பந்தியம் எடுத்து சமையல் அறையில் ப்ரவேசித்தாள்.

அழகான மனைவியை அடைய எந்த மகனுக்குத்தான் ஆசை அலைமோதாது. புடவையைப் பார்க்கும்போதே தன் லக்ஷ்ய மனைவியின் முகம் தோன்றி ஆனந்தக் கடலில் மூழ்கினான் ராஜா. அதே சமயம் வீதியில் இருந்து, "அத்திம் பேரே! ஹீ...ஹீ...ஹீ எங்க அக்கா ஹீ...ஹீ...அத்திம்பே ...ரே ஹீ...என்ற பீரங்கி குரல் அவனைத் தட்டி எழுப்பியது.

பதினைந்து, பதினாறு வயது மதிக்கக்கூடிய சிறுவன் தலையை பிய்த்துக்கொண்டு பயங்கரச் சிரிப்பு சிரித்தவாறு "அத்திம்பேர்...ஹீ ..ஹீ...நீங்கதானே என் ராஜா. என் ராஜாவான அத்திம்பேர். ஆமாம்....நீங்களேதான். நான் பார்த்தேனே" என்று ராஜு சற்றும் எதிர்பாராதவிதம் அவனைச் சேர்த்து அணைத்துக் கட்டி முத்தமிட்டு, "இதோ பாருங்கோ ... அத்திம்பேர் ... கடுதாசி ... கடுதாசி... எங்க அக்கா இல்லே ... அக்கா கடுதாசி குடுத்தா ... என்னை தெரியல்லே ஹீ ... ஹீ" என்று வீடே அதிரும்படி சிரித்தான்.

பாவம் ராஜாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. அத்திம்பேர் உறவு வைத்துக்கொண்டு பேசும் இந்த பயித்தியம் யாரு...என்னவோ கடுதாசி...அக்கா...ஒன்றுமே புரியவில்லையே. ஒரு வேளை...என்று அவன் சிந்தனை எங்கோ தாவியது. சட்டென்று பயித்தியத்தின் கையிலிருந்த கடி

---

இந்த இடத்திலுள்ள மற்றை ஆலயங்கள் பலதேவன் குகை, சேஷபூஷன் மஹாதேவ் கோயில், தைத்யசூதன் கோயில் முதலியன. பிரபாஸ் பட்டணம் முன் காலத்தில் மிகப் பெரியதாகத் திகழ்ந்திருக்கவேண்டும்; இப்போது சிறிது பாழடைந்துள்ளது. அருகாமையில் சோமநாதபுரம் கோயில் இப்போது திருப்பணி செய்யப்பெற்று வருவதால், இந்தப் பட்டணம் நாளடைவில் தழைத்தோங்கிவரும். இப்போது புதிய முறைகளில் சாலைகள் அமைக்கப்பெறுகின்றன; கட்டிடங்களும் எழும்புகின்றன. (தொடரும்)

தத்தை வாங்க வந்தான். கடிதத்தை நிஜார் ஜோபியில் திணித்துக்கொண்டு "ஹூம் தர மாட்டேன். என்னை யார் என்று...என் பேர் சொன்னுதான் தருவேன். கண்ணு சொல்லுங்கோ. என்னை தெரியல்லே. அன்னிக்கி ...ஹீ ஹீ... நீங்க எங்க அக்காவே பார்க்க வந்தீங்களே எங்க ஆத்துக்கு....அப்போ என்னை உள்ளேப்போட்டு பூட்டிட்டா அத்திம்பேர்...ஊ...ஊ" என்று அழத் தொடங்கினுன்.

இது ஏதுடா சனியன் என்று மனம் சலித்த ராஜா பயித்தியத்தை சமாதானம் செய்து அது கையில் இருந்த கடிதத்தை வாங்கும் பாடு போதும் என்ருய் விட்டது. கடிதம் ராஜூ கைக்கு மாறியதுதான் தாமதம் சற்றும் ஏதிர் பாராதவிதம் ராஜூவின் கன்னத்தில் 'சுரீல், என்று ஒரு அறை கொடுத்துவிட்டு பைத்தியம் வீதியை நோக்கி ஓட்டம் எடுத்தது.

"பயித்தியத்திற்கு பலம் அதிகம்" என்ற சொல்லுக்கு அர்த்த புஷ்டியுடன் அனுபவித்த ராஜூ கன்னத்தை தடவியவாறு கடிதத்தைப் படிக்கத் தொடங்கினுன்.

"என்னை மணைவியாய் அடையவுந்த கனம் ராஜா அவர்களுக்கு வணக்கம். 'பெண்பாவம் பொல்லாது' என்பது யாரும் அறிந்த விஷயம். கேவலம் பணம் ப்ரதானம் என்றுகருதி, பணம் இல்லை என்ற ஒரே காரணத்தால் கை பிடித்த மனைவியை உதறி என்னைக் கைப்பிடிக்கத் துணிந்தீர்கள். இங்கும் பணப் பசை குறைந்தால் மூத்தவள் கதிதான் எனக்கும் என்பது யாரும் எடுத்து சொல்ல வேண்டாம். நீங்கள் படித்த மேதாவி. அதிலும் பரோபகாரமான "டாக்டர்" தொழிலை மேற்கொண்டவர்கள். ஊராருக் கெல்லாம் மன நிம்மதி கொடுத்து தெய்வமாக விளங்கும் தாங்கள் கணவனே தெய்வம் என்று எண்ணும் கட்டிய மனைவியை (பணம் இல்லாத காரணத்திற்காக) மன நிம்மதி அற்று அலையவிட்டு ஆனந்திக்கும் உங்களுடன் புதிய வாழ்க்கைத் தொடங்க நான் தகுதியற்றவள். அற்பப் பணப் பேராசைப் பிடித்த தாய் தந்தையரை திருப்தி செய்யும் பிள்ளையாய் மட்டும் இல்லாமல் உத்தமன் என்ற பெயருடன் மூத்தமனைவிக்கு வாழ்க்கை கொடுத்து ப்ரகாசியுங்கள். என்னை மறந்து மூத்த மனைவியைத் தேடி ஓடுங்கள். அதுதான் நேர் பாதை. இன்று காலைதான் கேள்விப்பட்ட இந்த விஷயத்தை யார் மூலமும் அனுப்ப இஷ்டப்படாது பயித்தியம் பிடித்த என் தம்பி மூலம் அனுப்

பினேன். அவன் பயித்தியமானுலும் காரியத்தை ஜெயிப்பவன்.

இப்படிக்கு,
சாந்தி"

இதைப் படித்த ராஜாவின் உள்ளம் பொடி சூர்ணமாகியது. வந்த பயித்தியத்தின் நிலேயைவிட தடமாட்டத்துடன் தன் அறையை அடைந்தான். கட்டிலில் அவன் சரீரம் கிடந்ததே தவிர எண்ணம் புயல் காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அலேயத் தொடங்கியது.

...ராஜாவுக்கு 18 வயது இருக்கும். வாலிபமுடுக்கும், நாகரீகமும் அவன் அழகை இன்னும் பரிமளிக்கச் செய்தது. காலேஜில் படித்துக் கொண்டு இருந்த சமயம், ஒரு நாள் சபேசன் என்ற சீமான் ராஜாவை அழைத்து ஏதேதோ விஷயங்களேப் பற்றி அவனிடம் பேசிக்கொண்டு இருந்தார். ராஜாவின் புத்தி கூர்மையும், பேச்சு வன்மையும், முக வசீகரமும், அழகும் சபேசனே பித்தனுக்கியது. உயர்ந்த நிலேயிலுள்ள ராஜாவை மருமகனுக்கிக் கொடுண் ஆனந்திக்க திட்டமிட்டார்.

வலிய பெண்ணே கொடுக்க வந்தால் பிள்ளே வீட்டாரின் முடுக்குக்கு கேட்க வேண்டுமா? தன் ஆகாயக்கோட்டையை நிஜக்கோட்டையாக மாற்ற ஆசைப்பட்டாள் ராஜாவின் தாய். தன் மகனே டாக்டருக்குப் படிக்க வைத்து, டிஸ்பென்ஸரி, கார், முதல் ஏற்படுத்திக்கொடுத்து அவனே புகழ் ஏணியில் ஏற்றும்வரை உள்ள செலவுகள் பூராவும் ஏற்றுக் கொண்டால், அவர் மகளே நாட்டுப் பெண்ணுய் ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்தாள்.

விதியின் வலிமையை யாரால் அறிய முடியும். சபேசனும் சகல நிபந்தனேகளுக்கும் உட்பட்டு தன் மகளே ராஜாவின் கையில் ஒப்படைத்தார். மணம் நடந்து மூன்று வருடம் வரை மருமகனே உள்ளங்கையில் தாங்கி அவன் இஷ்டங்களேப் பூர்த்தி செய்வதே தன் பணியாய் கருதினர் சபேசன். காலதேவன் யாரை விடுவான். சபேசனின் உச்சியில் அமர்ந்து தன் ஆட்சிக் கொடியை நட்டான். அமோகமாய் நடந்துவரும் வியாபாரம் திடீரென்று பாய் தலேயணையை தேடி படுக்கத் தலேப்பட்டது. ஒரு வருஷத்திற்குள் சகல சொத்தையும் இழந்து கப்பரை ஏந்தும் நிலேக்கு வந்துவிட்டார் சபேசன். ராஜா மருத்துவக் காலேஜின் மூன்ருவது படியை ஏறும் சமயம் சபேசனே பண நெருக்கடி மென்னியை அழுத்தியது. பணம் கட்ட முடியாது திணறினர். கண்ணுடிப் போல் சபேசனின் தவிப்பை அறிந்தும், தான் பிள்ளேயைப் பெற்றவள் என்ற செருக்கால் பணம் தராததற்கு பெண்ணே தயா தாக்ஷிண்யம் யின்றி தாய் வீட்டுக்குத் துரத்தி கண்டபடி

பழித்து திட்டலானாள். அதே ஆத்திரத்தில் நில புலன்களை விற்று ராஜாவை டாக்டர் பட்டம் பெறச்செய்தாள் அவன் தாயார். அதிர்ஷ்ட தேவதையின் பலத்தால் ராஜா விறு விறு என்று புகழ் ஏணியில் ஏறி கைராசி டாக்டர் என்ற பெயரையும் பெற்றான். பெண்ணைப் பெற்ற ப்ரபுக்கள் அவன் புகழையும், அழகையும், கண்டு பெண் மேல் பெண் கொடுக்கவும் துணிந்து போட்டியிடத் துடங்கினார்கள். தனக்கு ஏற்ற பெண்ணை பொறுக்கும் வேட்டையில் இருந்த ராஜாவை, சாந்தி கடிதத்தின் ஒவ்வொரு வரியும் சவுக்கால் அடித்தது. வாலிபமே அறியாத வயதில் மணம் செய்துவைத்து, அதுவும் மனைவி பக்கலில் இருந்தால் படிப்பு தடைப்படும் என்று அவளை பிறந்த வீட்டோடு வைத்துவிட்டதில் மனைவி என்ற பாசமே அறியாது புஸ்தகத்தோடு தன் காலத்தை கடத்திவிட்டான். அதன் விளைவு தன் தாய் தந்தை செய்யும் அநியாயத்தையும் அறியாது அவர்கள் போட்ட தூபம் அவனை அடிமுட்டாளாக்கியது.

சொப்பன உலகத்தில் இருந்து விழித்தவன் போலிருந்த ராஜா அலறியவாறு எழுந்தான். சாந்தியின் கடிதத்தை மறுமுறை படித்தான். கடைசியாக, மாமனாருடன் சண்டையிட்டு வரும் சமயம் சின்னம் சிறுமியான அவன் மனைவி கண்களில் நீர் ததும்ப பரிதாபமாய் பார்த்தபார்வை நினைவில் வந்து அவனை தடுமாரச் செய்தது. கேவலம் பணம்தான் ப்ரதானம் என்று நினைத்து மனைவியை ஏறிட்டுப் பார்க்காது தாயுடன் உதாசீனமாய் இருந்த செய்கையின் பயங்கரம்,அவமானம் அவன் தலையை குனியச் செய்தது. ஆவேசம் வந்தவனைப் போல் சீறி எழுந்தான். சில துணிகளை எடுத்து பெட்டியில் திணித்துக்கொண்டு கிளம்பினான். தாயுடன் உதாசீனமாய் மனைவியைவிட்டு வந்ததற்கு ப்ராயச்சித்தமாய் தானே சென்று அழைத்துவர முடிவு செய்தான்.

கூடத்தை அடைந்த பகீரதி புது புடவைகள் தாறுமாறாய் சிதறிக் கிடப்பதைக் கண்டு, திடுக்கிட்டு, "ராஜா... ராஜா" என்று கூவினாள். அதே சமயம் பெட்டி சகிதம் பிரவேசித்த ராஜாவை கண்டு, "எங்கேப்பா பெட்டியுடன் ப்ரயாணம்?" என்று திகைத்துக் கேட்டாள்.

"எங்கேயா? என் அருமை மனைவியை அழைத்துவரத்தான் இந்தா" என்று பயித்தியம் கொடுத்த கடிதத்தைத் தாயிடம் கொடுத்துவிட்டு பதிலுக்கு எதிர்பார்க்காது வீதியை அடைந்தான். கடிதத்தைப் படித்த பகீரதி ப்ரமித்து ஒன்றுமே தோன்றாது சிலையாய் சமைந்தாள்.

---

# ஹிந்துசட்ட மாறுதல்கள்

ஸ்ரீமான். P. M. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B. A., M. L.,
(Retd. Dist. Judge.)

**ஹிந்து விவாகாதிகளைப்பற்றிய தர்மசாஸ்திரங்களும், இவைகளில், இந்தியா தேசத்து பார்லிமெண்டினுல் அங்கீகரிக்கப்பட்ட மாறுதல்களும்.**

ஹிந்து விவாக சட்டம் நெ. 15/1955, 18-5-1955-ல் அமுலுக்கு வந்தது. 18-5-1955 க்குப் பிறகு செய்யும் விவாகங்களெல்லாம் இந்த சட்டத்தை அனுசரித்திருக்க வேண்டும். சில விஷயங்களில் இந்த சட்டத்திற்கு விரோதமாக இருந்தாலும், தேசாசாரத்திற்கோ, குலாசாரத்திற்கோ ஏற்றதாக இருந்தால் அது சட்ட சம்மதமான விவாகமாகும். நமது தென்னுட்டில் அம்மானையும், அம்மான் மகள், அத்தை மகன் முதலான வரிசையில் இருந்தாலும் மணம் புரிந்து கொள்ளும் வழக்கம் நீடூழி காலமாக இருப்பதால் அத்தகைய விவாகங்கள் இனிமேலும் செய்யலாம்; அவைகள் சட்டத்திற்கு விரோதமாக மாட்டா. இவ் விவாகங்களுக்கு பௌதாயனருடைய கிரந்தம் ஆதரவும் கொடுக்கின்றது.

ஆனுல், சில விவாகங்கள் நமது தேசத்தில் வெகு காலமாகச் செய்யப்பட்டு வந்தாலும் அவை 1955-ம் ஹூ சட்டத்தில் நிஷேதிக்கப் பட்டவையாகும். 18-5-1955 க்குப் பிறகு செய்யப்படும் கீழ்கண்ட மூன்று விதமான விவாகச் சட்டப்படி செல்லாதவை. மேலும், கோர்ட்டார் அவர்கள் அவைகளை செல்லாதவை என்று தீர்மானிக்கலாம்.

1 வதுவுக்கோ, வரனுக்கோ விவாகமாகும்போது முதல் புருஷனோ, முதல் மனைவியோ ஜீவித்து இருத்தல்.

2. வது வராள் பரஸ்பரம் மணம் செய்துகொள்ளக் கூடாத தலைமுறை வரிசையில் இருத்தலும், அத்தகைய மணத்திற்குத் தொன்றுதொட்டு வரும் வழக்கமில்லாதிருத்தலும்.

3. அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் சட்டத்தில் நிஷேதிக்கப்பட்ட பந்துத்வம் பெற்றவர்களா யிருத்தலும், இவ்விதமான விவாகத்திற்கு தேச வழக்கமாவது குல வழக்கமாவது இல்லாமலிருத்தலும்.

மேலும், 1955-ம் ஹூ சட்டத்திற்கு முந்தியாகிலும், பிந்தியாகிலும் செய்யப்பட்ட விவாகங்கள் கீழ்க் கண்ட காரணங்களினுல் ரத்து செய்யப்படலாம்.

1. தம்பதிகளில் புருஷனுக்கு புருஷத்துவமோ அல்லது ஸ்திரீக்கு ஸ்திரீத்வமோ கல்யாணமான காலத்திலும்

அதற்குப் பிறகும் கோர்ட்டாருக்கு மனு கொடுக்கும் பரியந்தம் இல்லாமலிருத்தல்;

2. தம்பதிகளில் யாருக்காவது கல்யாண காலத்தில் மூளை சரியில்லாமல் இருத்தல் அல்லது பயித்தியம் பிடித்திருத்தல்;

3. மோசத்தினுலோ, பலாத்காரத்தினுலோ கல்யாணத்திற்கு தம்பதிகளில் ஒருவருடைய சம்மதம் பெறுதல், அல்லது அவ்வழியில் மைனர்பெண்ணின் சம்ரக்ஷண கர்த்தாவின் சம்மதம் பெறுதல், (இந்த மோசம் அல்லது பலாத்காரம் தெரிந்த பிறகும் தம்பதிகள் சேர்ந்து வாழ்ந்து வந்தால், விவாகம் ரத்தாகாது.)

4. விவாகத்தின் காலத்தில் வது வேருெரு புருஷனுல் கர்ப்பிணியாயிருந்து, இவ்விஷயம் வரனுக்கு அப்பொழுது தெரியாமலும், தெரிந்த பிறகு கூடாமலும் இருக்க வேண்டும். மேற்கூறிய காரணங்களால் கோர்ட்டார் விவாகத்தை ரத்து செய்யும்வரை விவாகம் சட்டப்படி செல்லும். ரத்து செய்யக் கோர்ட்டுக்கு மனு செய்துகொள்ள வேண்டும். அதற்கு ஒரு வருஷம் காலம் நியதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

சட்ட விரோதமான சில விவாதங்களில் சம்மந்தப் பட்டவர்கள், சட்டப்படி தண்டனைக்குப் பாத்திரராவார்கள். அதாவது, மணுளனே மனைவியோ இருக்கும்போதே மற்றொரு விவாகம் செய்து கொண்டவர்கள்; தடையாகச் செய்யப்பட்ட ஜாதி முறையும், பந்துத்வத்தையும் மீறி விவாகம் செய்துகொண்டவர்கள்; குறித்த வயது ஆகும் முன்னேயே விவாகம் செய்து கொண்டவர்கள்; கிரிமினல் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டுத் தண்டனைக்கு உட்படுவார்கள்.

விவாகம் செய்யும் முறை 1955-ம் வருஷத்தில் சட்டத்தில் நூதனமாக ஒன்றும் சொல்லப்பட வில்லை. ஹிந்து தர்ம சாஸ்த்திரங்கள் விதித்த முறையைத்தான் பின்பற்ற வேண்டும். அம்முறையில் முக்கியமான அம்சங்கள் (1) பாணிக்கிரகணம், (2) சப்தபதி: அதாதது வதூவராள் கையைப் பிடித்துக்கொண்டு 7 அடிகள் சேர்ந்து நடப்பது. 7-வது அடி நடந்தவுடன் விவாகம் பூர்த்தியாகும். அக்னியை வளர்த்து ஹோமம் செய்வது வைதிகமுறை. ஹிந்துக்களில் பல வகுப்புக்கள் இருக்கின்றன. பெரும்பாலும் ஹிந்துக்கள் மேற்படி முறையைத் தான் அனுஷ்டிக்கிருர்கள். சில வகுப்பார் அந்தந்த வகுப்பில் பிராசீனமாய் ஏற்பட்ட வகுப்பினர் எல்லோரும் ஆதரிக்கும் முறையை உபயோகிக்கிருர்கள். ஆதலால் நியாயமான கல்யாணமாக வேண்டுமானுல் தர்ம சாஸ்த்திர விதிகளை அனுசரித்

தோ அல்லது தீர்க்க காலமாக ஏற்பட்டுள்ள குலாசாரத்தை அனுசரித்தோ கல்யாண நிகழ்ச்சி நடைபெற வேண்டும். இப்படி இல்லாமல் தான்தோன்றியாக ஒரு புது வழியைக் கிளப்பி அதன்படி கல்யாணம் நடந்ததென்ருல் அது சரியான கல்யாணமாகாது. அந்த புருஷன் ஸ்திரீகளுக்கு லாப்படி தாம்பத்யம் ஏற்படாது. இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். சமீப காலத்தில் முதல் மனைவி இறந்த பிறகு ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார், முதல் புருஷன் இறந்த ஒரு ரெட்டி ஜாதி ஸ்திரீயை மணம்செய்து கொண்டார். அவர்களிருவரும் சுயமரியாதைக் கக்ஷியில் சேர்ந்தவர்களென்றும் புரோகித மறுப்புச் சங்கம் கொள்கைப்படி ஒரு நூதனமான முறைப்படி விவாகம் செய்து கொண்டதாகவும் சொன்னர்கள். அந்த முறை கீழ் வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது:

"ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் மணம் செய்துகொள்ள நிச்சயித்தால் அவர்கள் புரோகித மறுப்புச் சங்கத்திற்குத் தெரியப்படுத்துவார்கள். அந்த சங்கத்தின் அத்யக்ஷரும் கார்யதர்சியும் பந்துக்களுக்கும் சங்கத்திய பெரியோர்களுக்கும் அழைப்புப் பத்திரிகைகள் அனுப்புவார்கள். விவாகத்திற்கு ஏற்படுத்தப்பட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் ஜனங்கள் கூடுவார்கள். அப்பொழுது சங்கத்தின் தலைவர்கள் விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீபுமான்களை அவ்விடம்கூடியிருக்கும் ஜனங்களுக்கு அறிமுகம் செய்விப்பார்கள். அதன்பிறகு அந்த ஸ்திரீபுமான்கள் ஒருவருக்கொருவர் மாலைகளும் மோதிரங்களும் மாற்றிக்கொண்டு தாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் அந்யோந்யமாகவும் புருஷன் பத்நியாகவும், ஒருவர் சுகதுக்கங்களை மற்ருெருவருடையதாகவே எண்ணி அனுபவிப்பதாகவும் அவ்விடத்தில் எல்லா ஜநங்களும் கேட்கும்படி உறுதிமொழி செய்வார்கள். அதன்பிறகு அவ்விடம் வந்த பெரியோர்கள் அவர்களை ஆசீர்வாதம் செய்வார்கள். அபிவந்தன பத்திரங்கள் ஏதாவது வந்திருந்தால் அவைகளை அங்கு படிப்பார்கள். பிறகு அவர்களெல்லோருக்கும் ஒரு விருந்து அளிக்கப்படும். இந்த விவாகத்தை வர்த்தா பத்திரிகைகளில் பிரசுரம் செய்வார்களாம். இஷ்டமிருந்தால் நூதன தம்பதிகளுடைய போடோவும் வெளியிடுவார்கள்."

இது சிலர் சேர்ந்து புதிதாகச் செய்துகொண்டவிவாக நிகழ்ச்சிக்கிரமம். மதராசு ஹைக்கோர்ட்டு நீதிபதிகள் இதை விமர்சித்து இது சரியான விவாகமல்லவென்று அந்த ஸ்திரீபுமான்களுக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் தாம்பத்தியம் சித்திக்கவில்லையென்றும் தீர்மானித்தார்கள். ஆதலால், புதுமுறை ஒன்றை ஸ்தாபிக்க ஜனங்களுக்கு அதிகாரமில்லை. தர்மசாஸ்திரமுறையையோ அல்லது

ஒரு ஜாதியில் பண்டைக்காலமாக வழக்கத்திலிருந்து வரும் முறையையோதான் பின்பற்றவேண்டும். இந்தவிஷயத்தில் 1955-ம் வருஷத்திய சட்டம் ஒருமாறுதலையும் செய்யவில்லை. ஆனால் சரியானமுறைப்படி ஒருவிவாகம் செய்யப்பட்டிருந்தாலும், சௌகர்யத்திற்காகவும், பிறகு எவ்விதமான கேள்விக்கும் சந்தேகத்திற்கும் இடமில்லாமலிருப்பதற்காகவும், அந்த விவாகத்தை ஷை சட்டப்படி நியமிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிவித்து அவர் வைத்திருக்கும் ரிஜிஸ்தரில் பதிவுசெய்து கொள்ளலாம். இப்படி பதிவுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. பதிவுசெய்து கொள்வதினால் மாத்திரம் விவாகம் ஆகிவிட்டதாக ஆகாது.

விவாக நிகழ்ச்சிகளைப்பற்றிச் சில விஷயங்கள் கவனிக்கத்தக்கவையுண்டு. சில வருஷங்களாக வரனுக்கு கன்யையினுடைய பிதாவின் அந்தஸ்தையும் மீறி வரதக்ஷிணை என்னும் பெயரில் விசேஷமான தனமும் சீர் என்று பல விதமான உயர்ந்த விலையுள்ள ஆடை ஆபரணங்களும் கொடுக்கப்பட்டுவருகிறது. அதற்கு தர்மசாஸ்திரத்திலாவது மற்ற சட்டங்களிலாவது எவ்விதமான நிர்பந்தமும் இல்லை. ஒரு மிருதனை (இறந்த) புருஷனுடைய சொத்தில் 1956-ம் வருஷத்திய சட்டத்தின்படி மகனுக்குச்சமானமானபாகம் மகளுக்கும் ஏற்படுத்தபட்டிருப்பதால் ஷை வரதக்ஷிணை முதலான வழக்கங்கள் குறைந்துவிடுமென்று நம்பலாம். விவாககாலத்தில் பரதேச யாத்திரை காசி யாத்திரை என்று ஒரு அர்த்தமில்லாத வழக்கம் சிலர் பாராட்டுகிறார்கள். குருகுல வாசம் செய்து குருவின் அனுஞ்ஞையைப் பெற்று ஸ்னாதக ஸமாவர்த்தன விரதங்களை முடித்துச்சுப லக்ஷணங்களமைந்த கந்நிகையை மணம்புரிய வேண்டுமென்றுமனுஸ்முருதி 3-வது அத்யாயத்திலும், தைத்திரீயோப நிஷத்து சிக்ஷாவல்லி 11-வது அனுவாகத்தில் "ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய பிரஜா தந்தும் மாவ்யவ ச்சேத்சீ:" என்றும் சொல்லப்பட்டபடி வேதாத்தியன சீல சம்பத்தி அடைந்த ஒரு பிரஹ்மசாரிக்கு பரதேசகோலமும் அதனுடைய அடிப்படையான காரணமும் சரியாக இருக்கும் என்று நினைத்தாலும், தற்காலத்தில் அப்பேர்ப்பட்ட அதிகாரிகளான பிரஹ்மசாரிகள் அரிதாதலால் ஷை வழக்கம் பரிஹாஸாஸ்பதமேயாகும்.

மற்றொரு விஷயம்: விவாக காலத்தில் புரோகிதர் உச்சரிக்கும் சில மந்திரங்களின் பொருளும் சீர்மையும் வதூவரர்கள் நன்கறிய வேண்டியது முக்கியமாகும். விவாக சம்பந்தமான லௌகீகங்கள் வெகு சிரத்தையுடன் நடத்துகிறார்களே தவிர, விவாக முக்ய மந்திரங்களின் பெருமையையாரும் கவனிப்பதில்லை. கொட்டு மேளத்திலும் அதிக சந்தடியிலும் வதுவரர்களுக்கு ஸம்ஸ்க்ருதபாஷை தெரிந்

திருந்தாலும் அவர்கள் அம்மந்திரங்களையாவது அவற்றின் பொருளையாவது அறிய நேரிடுவதில்லை. ஒவ்வொரு விவாகத்திலும் புரோகிதர் அம்மந்திரங்களைச்சரியாக உச்சரிக்க வேண்டியதும், அவற்றின் பொருளை வதூவரர்களுக்குத் தெரியும்படி விளக்கவேண்டியதும் மிக்க அவச்யம். அம்மந்திரங்கள் வதூவரர்கள் பரஸ்பரம் நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும், அவர்களுடைய பரஸ்பர உரிமைகளையும் யாத்ய நிர்பந்தங்களையும் விவரிக்கின்றன. இந்தக்கருத்தைத் தான் ஸ்ரீமத் ராமாயணத்தில் சீதாபிராட்டி சொல்லியிருக்கிறாள். சுந்தரகாண்டம், 24-வது சர்க்கம், ச்லோகங்கள் 9-லிருந்து 21½வரை கீழ்வருமாறு:

"தீனோவா ராஜ்யஹீனோவா யோமேபர்தா ஸமே குரு: |
தம் நித்யமநுரக்தாஸ்மி யதா சூர்யம் சுவர்சலா ||
யதா சசிமகா பாகா சக்ரம் ஸமு திஷ்டதி |
அருந்ததீ வசிஸ்டஞ்ச ரோகிணி பசிநம்யதா ||
லோபா முத்ரா யதா கஸ்த்யம் சுகந்யா ச்யவநம்யதா |
ஸாவித்ரீ ஸத்யவந்தம்ச கபிலம் ஸ்ரீமதியதா ||
ஸௌதாஸம் மதயந்தீவ கேசிநீஸகரம்யதா |
நைஷதம் தமயந்தீவ பைமீ பதிமனுவ்ராதா ||
ததாஹ மிக்ஷ்வாகுவரம் ராமம் பதிமனுவ்ரதா |"

"சுவர்சலா தேவி புருஷனாகிய சூர்யனை எப்படி அனுசரித்திருக்கிறாளோ, கதியற்றவனாயும் ராஜ்யஹீனனாயும் இருந்தாலும் என்பர்த்தாதான் எனக்கு பூஜ்யர். அவரிடம் நான் நிரந்தர பிரேமையுடையவளாக இருக்கிறேன். பாக்யவதியான சசிதேவி இந்திரனையும், அருந்ததி வஸிஷ்டரையும், ரோகிணி சந்திரனையும், லோபாமுத்ரை அகஸ்தியரையும், சுகன்யை ச்யவன மகர்ஷியையும், சாவித்திரிதேவி ஸத்யவானையும், ஸ்ரீமதிதேவி கபிலரையும், மதயந்தி ஸௌதாசமஹாராஜாவையும், கேசினி ஸகர சக்கரவர்த்தியையும், பீமராஜவின் மகளாகிய தமயந்தி நள மஹாராஜனையும், எப்படி அனுசரித்துபிரேமித்தார்களோ அப்படியே இக்ஷ்வாகுவம்ச ச்ரேஷ்டனான ஸ்ரீராமனை பர்த்தாவாகஆச்ரயித்திருக்கிறேன்"—என்று மேற் சுலோகங்களின் கருத்து.

(தொடரும்)

---

மேலே உள்ள கட்டுரையில் படித்த விவாக சம்பந்தமான முக்ய அம்சங்களையும், முக்ய மந்திரங்களையும், அதன் பொருள்களையும் ஒருங்கே திரட்டி விளக்கி,

# தென்னாட்டு கல்யாண முறைகள்

என்கிற பெயரில் இசை சித்திரமாக அகில இந்திய ரேடியோவில் நமது ஆசிரியை வை. மு. கோ. ஒலிபரப்பியதை கேட்டு இருப்பீர்கள். அதை படித்தால் கல்யாண முறை பூராவும் நன்கு அறியலாம். விலை அணா 12-தான். படிக்க தவறாதீர்கள்!

# காளிதாஸர் கனவு

## 9, மேக தர்சனம் : மேக சந்தேசம்.

[ஸ்ரீ: கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அவளுக்கு என்னிடமுள்ள அளவற்ற அன்பு எனக்குத் தெரியும். முதற் பிரிவால் ஏற்பட்ட தாங்க முடியாத துயரத்தால் அவள் இப்படியாகிவிட்டாள். நான் ஏதோ என் அழகின் பெருமையால் இப்படிக் கூறுகின்றேன் என்று எண்ணுதே. நான் கூறியபடி அவளுடைய நிலை இருப்பது நீ அவளைப் பார்க்கும் பொழுது உனக்கு நன்கு விளங்கும். மைதீட்டாததும், அடிக்கடி மறைக்கும் கூந்தலால் தடுக்கப்பட்ட கடைக்கண் பார்வையுடன் கூடியதும், நீ வந்தவுடன் தூக்கிப்பார்க்கப்பட்டதுமான அவளுடைய கண்கள் அழகிஞல் தாமரையை ஒத்திருக்கும். இடையணியாகிய ஒட்டியாணத்தை அவள் அணிந்து கொள்ளாமல் இருப்பள். ஒருவேளை அவள் உறங்கி என்னைக் கனவில் கண்டு களித்திருக்கும் சமயமாக இருந்தால் அவளை உன் இடி முழக்கத்தால் விழிக்கச் செய்யவேண்டாம். அவள் விழித்த பிறகு நீ அவள் மேல் நீரால் குளிர்ந்த காற்றை வீசி இடி முழக்கமாகிற சொற்களால் அவளிடம் பின் வருமாறு கூறவேண்டுகின்றேன்.

"நான் உன் கணவனுடைய பிரிய நண்பன். பிரிந்த காதலர்களைச் சேர்த்து வைப்பதில் எனக்கு இன்பம். உன் கணவன் சொல்லியனுப்பிய செய்தியைக் கேள்."

இதைக் கேட்டவுடன் அவள் அனுமானைக் கண்ட சீதாதேவியைப்போல் களித்து உன்னை நிமிர்ந்து அன்புடன் நோக்குவள். பிறகு நீ கூறுவதைக் கவனமாகக் கேட்பள். காதலன் செய்தியை நண்பன் உரைப்பதைக் கேட்பது காதலனை நேராகத் தழுவதலைவிடக் கொஞ்சம் குறைந்தாலும் ஒத்ததாகும்.

நீ அவளிடம் மீண்டும் கூறவேண்டும், "உன் கணவன் ராமகிரியில் புண்ணியமான ஆசிரமத்தில் இருந்து கொண்டு உன் நன்மையைக் கோரிக்கொண்டிருக்கின்றான். துன்பத்தால் வருந்துகின்றவர்களுக்கு இதுதான் தொடக்கத்தில் கூறப்படவேண்டும்.

பூர்வாபாஷ்யம் சுலப விபதாம்
ப்ராணினுமேததேவ | .

"அது வருந்தி பெருமூச்செறிந்து மெலிந்த அங்கங்களால் உன்னைத் தழுவவிரும்பும், உன் காதலன் பகையுள்ள விதியால் தொலையிலிருக்கும்படி செய்யப்பட்டான்: யாவரும் கேட்கும்படிக் கூறக்கூடிய எண்ணங்களைக்கூட உன்னிடம் இருந்த ஆசையால் உன் முகத்தைத் தொட விரும்பி உன்னிடம் நெருங்கி ரகசியமாகக் கூறினனே அவன் தன்னுடைய நண்பனுகிய என் மூலமாக உன்னிடம் அன்பு கனிந்த இம்மொழிகளைக் கூறச் சொன்னான்:

"கொடிகளில் உன் மெய்யழகையும் மான்களுடைய கண்களில் உன் கண்ணழகையும், மயில் தோகையில் உன் கூந்தலழகையும் ஆற்றின் சிறு அலைகளில் உன் புருவங்களின் அழகையும் தேடிப் பார்த்தும் ஒற்றுமையைக் காணாததால் வருந்துகின்றான். காவிக்கற்களால் உன் அழகிய உருவத்தை எழுத முயற்சித்தும் தடுக்கும் கண்ணீரால் ஓவியத்தை முடிக்க முடியாமல் அவன் வாடி நிற்கின்றான். கனவில் உன்னைக் கண்டுத் தழுவ முயற்சித்துக் கைகளை ஆசையுடன் நீட்டும்பொழுது அவனுடைய பரிதாப நிலையைக் காணும் வனதேவதைகளும் பனித்துளிகள் மூலமாகக் கண்ணீர் வடிக்கின்றார்கள். இமயமலையிலிருந்து தேவதாரு மரங்களின் தளிர்களைத் தொட்டசைத்து அவைகளிலிருந்து பெருகும் மணமுள்ள பாலின் சேர்க்கையால் மணம் கமழும் காற்று தென்திசையை நோக்கி வீசும்பொழுது அது உன்னைத்தொட்டு வந்திருக்குமோ என்ற மோகத்தால் அதை ஆசையுடன் தழுவிக் கொள்ளுகின்றான். "இரவு ஒரு கணம்போல் மறுபடி எப்பொழுது போகும், பகல் எப்பொழுது வெப்பமின்றி குளிர்ச்சியாக இருக்கும்" என்று உன்னை விட்டுப் பிரிந்த துயரத்தின் வெப்பத்தால் வருந்தி எண்ணமிட்டுக் கொண்டிருக்கின்றான். வருந்தாதே! எண்ணத்தின்மேல் எண்ணமிட்டுக் கொண்டு நான் என்னை தைர்யப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். நீயும் அச்சமின்றி இரு. யாருக்குத்தான் மாறாத இன்பமோ துன்பமோ வருகின்றது? ஒவ்வொருவரும் சகடக்கால் போல் மேலும் கீழுமாகவே சென்று கொண்டிருக்கின்றார்கள்.

கஸ்யாத்யந்தம் ஸுகமுப நதம் துக்கமேகாந்ததோவா
நீசைர் கச்சத்யுபரிச தசாம் சக்ரநேமிக்ரமேண |.

ஆதிநாராயணன் யோக நித்திரையிலிருந்து எழும்பொழுது என்னுடைய சாபம் முடிவடையும். அதுவரையில் உள்ள நான்கு மாதங்களைக் கண்களை மூடிக்கொண்டுப் பொருத்துக்கொள். அதற்குப் பிறகு வெண்ணிலா நிறைந்த இரவுகளில் நாமிருவரும் பரமானந்தமாகப் பிரிவில் எண்ணமிட்ட இன்பங்களை நுகர்வோம். என்னைத் தழுவி உறங்கும் சமயத்தில் நீ எழுந்திருந்து "வேறு எந்த மாதையோ விரும்பி என்னை விட்டுப் போவதாகக் கனவு கண்டேன்" என்று உட்சிரிப்புடனும் வெளியழகுடனும் நீ கூறுவாய். ஆசையால் நான் உயிர் வாழ்கின்றேன் என்று அறிந்து யார் எதைக் கூறினாலும் என்னிடம் உனக்கு உள்ள உள்ளன்பு குறையக்கூடாது. பிரிவால் ஆசை குறையும் என்பது தவறு. பிரிவால் ஆசை மலைபோல் வளர்கின்றது என்பது தான் திண்ணம்."

ஸ்னேஹானு ஹு: கிமபிவிரஹே த்வம்ஸினஸ்
தேத்வபோகா
திஷ்டேவஸ்துன்யுபசித ரஸா: ப்ரேம ராசீபவந்தி |

இப்படி முதற்பிரிவால் வருந்தும் அவனைத் தேற்றி ஆறுதலளித்து அவன் கூறும் ஆறுதலான மறுமொழிகளை என்னிடம் கூறி என் உயிரைக் காக்கும்படி உன்னை வேண்டுகின்றேன். இந்த அன்பு நிறைந்த தூதுவேலையை நீ செய்வாயா? நீ பதில்

கூறுததால் அசட்டையாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. நீ மௌனமாகவே சாதகப் பறவைகளுக்கு நீர் அளிப்பதால் உன் மௌனமே சம்மதமென்று நான் கருதுகின்றேன். பிரியமான பதிலைக் காட்டிலும் பிரியமான உபகாரம் பெரிது.

ப்ரத்யுக் தம் ஹிப்ரணயிஷு
ஸ்தாமீப் ஸிதார்த்த க்ரியைவ |

என் வேண்டுகோளுக்கிணங்கியாவது, அன்பாலாவது, கருணையாலாவது இந்த உபகாரத்தை எனக்குச் செய்து நீ உன் மனைவியான மின்னலுடன் எப்பொழுதும் பிரிவின்றிக் கூடிஆனந்தமாக இருக்கும்படி இறைவனை இறைஞ்சுகின்றேன்."


குமாரதாஸா! மேகசந்தேசத்தின் சாரத்தை நான் கூறியதிலிருந்து நீ ஒரு அரிய கருத்தை உணரவேண்டும். தூய்மையானதும் உணர்ச்சி நிறைந்ததுமான வாழ்க்கைதான் தெய்வீக வாழ்க்கை. சந்திரகலாதேவியைப் பிரிந்து தவிக்கும் என்னுடைய ஆன்மா என்விப்பிரலம்ப சிங்காரத்தை (பிரிவில் ஒளி வீசும் காதலை) மேன்மையாக விரிவாகக் கூறுகின்றது என்று உனக்கு நன்கு விளங்கும். நான் அளகாபுரியைப்பற்றிக் கூறிய வர்ணனை இந்த அழகிய தூய்மை நிறைந்த பாரத நாட்டுக்கே உரியது.

ஸ்வல்பீபூதே ஸுசரித பலே ஸ்வர்கிணும் காம்
கதாணும்
சேஷை: புண்யைர் ஹ்ருதமிவ திவ: காந்திமத்
கண்டமேகம் |

இந்தப் புண்ணிய நாட்டில் அன்பு நிறைந்த வாழ்வே வாழ்வு.

ஸ்னேஹானு ஹு: கிமிபிவிரஹே த்வம்ஸினஸ்
தேத்வபோகா
திஷ்டேவஸ்துன்யுபசித ரஸா: ப்ரேம ராசிபவந்தி ||

(தொடரும்)



சப்தஸ்வரத்தின் எதிர் மூச்சு எப்படி?

# நக்ஷத்ர மண்டலம்

**M. மைனுவதி**

சமீபத்தில் ஒரு நக்ஷத்திரம் சுடர் விட்டு பிரகாசிக்க ஆரம்பித்து அனைவருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கின்றது. ஆனால் அந்த நக்ஷத்திரம் புதிது அல்ல. சில நாட்களாகவே பிரகாசம் அதிகமாயுள்ள மற்றொரு நக்ஷத்திரத்தின் நிழலில் மறைந்திருந்ததினால் எவருக்கும் அது புலப்படவே இல்லை. சமீபத்தில் அந்த நக்ஷத்திரத்திற்கு திடீரென்று பிரகாசம் அதிகமாகி, அருகிலுள்ள, மற்றொரு நக்ஷத்திரத்துடனும், சேர்ந்தும், தனியாகவும் நமது கண்களை கூச வைக்கின்றது. அடடா! ஆகாயத்தை அண்ணாந்து பார்க்காதீர்கள். நான் குறிப்பிடுவது சினிமா வானில், பிரகாசிக்கும் இரு நக்ஷத்திர சகோதரிகளைத்தான். அவர்களில், மூத்தவருடன் நாம் முன்பே அனவளாவி இருக்கின்றோம். இளையவரான **மைனுவதி** அவர்கள் இவ்விதழிற்காக கையில் பேனாவுடன் காத்திருக்கின்றார். கண்கள், பொன்வயல், நன்னம்பிக்கை, என்மகள், நல்லவீடு, முதலிய படங்களில், முன்பே நடித்திருந்தும் பட உலகில் இப்பொழுதுதான் விதையை ஊன்றியவராக தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறார். ஆனால் தற்சமயம் இவருக்கு ஒப்பந்தமாகி இருக்கும் படங்களின் எண்ணிக்கையை கவனித்தால், அவ்விதை விருக்ஷமாக செழித்து வளர அதிக நாட்கள் இல்லை என்பது நன்கு தெரிய வருகின்றது, அதற்கு காரணம் இவரது **குலதெய்வம்** என்பதில் ஐயமில்லை.

இனிய தமிழ் மொழியின் மூன்று வகைகளில் ஒன்றான நாடகம் என்னும் பழம் பெருங்கலையில் இவரது திறமையை அனைவரும் கண்டு களித்திருக்கின்றீர்கள். வெளியூர்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ள மாபெரும் ரசிகர்களையும் மகிழ்விக்கின்றார். மோகினித் தீவில் புவன மோகினியாகத் தோன்றி ஆண் உடையில் அமர்க்களம் செய்ததை மறக்கத்தான் முடியுமா? அன்றி சமீபத்திய நாடகமாகிய 'பிரசிடெண்ட் பஞ்சாட்சர'த்தில் கதாநாயகி பாகம் ஏற்று உறவினர்கள் இருவரையும் காதல் போட்டியில் மண்ணை கவ்வச் செய்து, தந்தை மனப்பிரமையினால் மிரண்டு நடுநடுங்கி மரியாதை செய்த போலி அதிகாரியான விருந்தாளிக்கே மாலையிட்ட இவரது சாமார்த்தியத்தைதான் மறக்கமுடியுமா? நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிக்கொடி நாட்டிய ஒரு படத்தில் இவரது நடிப்பு சினிமா உலகத்திலும் இவருக்கு ஒரு நிரந்தர ஸ்தாபனத்தை சம்பாதித்து கொடுத்துவிட்டது. அந்த படத்தில் வரும் குடும்பத்தில் வரும் ஒவ்வொருவரையும் தமது குறும்பினால் ஆட்டி வைத்ததே போன்று, ரசிக மக்களைகூட தமது இயற்கையான நடிப்பினால், மாற்றி மாற்றி சிரிக்க வைத்தும், அழவைத்தும் படாத பாடு படவைத்துவிட்டாரே! அந்த படத்தில் முன் பகுதியில் இவரிடம் காணப்படும் குறும்பு இயற்கையிலேயே இவரிடம் காணப்படுகின்றது. வீட்டிலேயே செல்ல **"மைனு"** வாக திகழ்ந்து சகோதரருடைய குழந்தைகளை வலிய வம்புக்கு இழுத்துக்கொண்டு வளைய வருகின்றார்.

தனது சகோதரருடைய புதல்விகளின் எதிரிலேயே, குலதெய்வம் பார்த்த பிறகு தான் அவர்களுடைய கடைக்கண் பார்வை தன்மேல் சிறிது விழுந்திருப்பதாக என்னிடம் கூறி அவர்களை சங்கடத்திற்குள்ளாக்கினார். சதா ஏதாவது ஒரு ராகத்தை முணுமுணுத்தவாறு பாடிக்கொண்டிருக்கும் இவர் நாடகங்களில் சொந்தகுரலிலேயேபாடி ஜமாய்த்து விடுகின்றார். எதிராளி தடுக்கின் கீழ் நுழைந்தால், தான் கோலத்தின் கீழ் நுழையும் சாமர்த்தியம் இவரிடம் இருப்பது மட்டுமல்ல; அத்தகைய சாமர்த்தியம் தன்னிடம் இருப்பது மற்றவருக்கு தெரியாது. பேசுவதிலும் சமர்த்தராக இருக்கிறார். நான் ஒரு கேள்வி கேட்கும் முன்பே மடமடவென்று நான் இன்னும் கேட்க நினைத்த கேள்வி[illegible] வித்து விடுகின்[illegible]. உபாத்தியாயர் [illegible] தனது [illegible]டம் ஒவ்வொரு சமயம் [illegible] கேள்விக்கு பதிலை பெற்று



182706

விடுவார். என்னைப் போன்றவர்கள் கமது மைனாவதி அவர்களிடம் தங்களது கேள்விகளை வீசினால் ஒரு மௌனப் புன்னகை மிளிருவதைத் தான் காணமுடியும். நானும் விடாமல் மீண்டும் எனது கேள்வியைத் தொடர்ந்தேன். ஆனால் இவர் பதில் கூறாமல் குறும்பு புன்னகையுடன் தன் பேனாவை எடுத்து காட்டினார். நானும் அதை புரிந்து கொண்டு கப்பென்று வாயை மூடிக் கொண்டேன். அதாவது கட்டுரை மூலமாக ரசிகர்களுடைய சந்தேகங்களை தீர்ப்பதாக அவ்வாறு கூறினார். இவர் மறந்தும் ரசிகர்மேல் குற்றம் சாட்டாதது மிகவும் போற்றப்படவேண்டிய ஒரு சிறந்த குணமாகும். ரசிகர்களின் புகழ் மொழிகளை ஆவலுடன் ஏற்றுக் கொண்டுவிட்டு அவர்கள் இகழ்ந்தால் மட்டும் கோபம் கொள்வதில் அர்த்தமே இல்லை என்று அழுத்தமாக கூறினார். ஒரு வேடிக்கை—சினிமா உலகத்தைப் பற்றி தான் கூறும்படியாக அபிப்பிராயம் ஏதும் தனக்கு இல்லை என்று கூறும் இவர், தான் கூறுவதையே ஒரு அபிப்பிராயமாக நான் எழுதிவிடுவேன் என்பதையே மறந்துவிட்டார். "நீங்கள் ஹாஸ்ய பாகத்தில்தான் சோபிக்கின்றீர்கள்" என்று யாராகிலும் இவரிடம் கூறிவிட்டால் போதும். அவ்வளவுதான் கோபம் கொதித்தெழ அல்லிராணியாக மாறி அந்த வார்த்தையை வாபஸ் வாங்கும் வரை விடமாட்டார். எல்லாவிதமான பாத்திரங்களிலும் நடிக்க தகுதி வாய்ந்தவராக விளங்குவதையே இவர் விரும்புகிறார்.

— சாரக்ராகி.

சிறுவயதிலிருந்தே சிட்டுக் குருவிபோல் சிங்காரமாக சிரித்தோடி விளையாடும் இயல்புடைய என்னை சிந்தனைக்குள் ஆழ்த்தியது ஒரு விஷயம். ஆனந்தமாக ஆடிப்பாடி குறும்பு செய்து கும்மாளம் போடத்தான் எனக்குத் தெரியும் அழத் தெரியாது என்றார்களே! அதைக்கேட்கக் கேட்க எனக்கு உண்மையிலேயே அழுகையும் ஆத்திரமும் வரும். ஏன் தெரியுமா? எல்லா விதமான பாத்திரங்களையும் ஏற்று "பலே" என்று எல்லோரும் பாராட்டி பேசும்படியாக நடிக்கவேண்டும் என்ற ஆசை எனக்கு. ஆனால் அமைய வேண்டுமே அப்படிப்பட்ட பாத்திரம். சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்து காத்திருந்தேன். அதிகநாள் ஆகவில்லை அந்த நாள் வர. கடைசியில் "குலதெய்வம்" கிருபை செய்துவிட்டது.


தங்கக் கட்டி தகுந்த தட்டானிடம் கிடைத்தால்தான் அழகான ஆபரணங்களாகி அனைவரும் ஆனந்திக்கும் பொருளாகி விடுகிறது. வேலைப்பாடு தெரியாதவரிடம் கிடைத்தால் வேலையைப்பார்த்து தங்கமா? அன்றி பித்தளையா? என்று சந்தேகிக்கும்படி நேரிடும். அதுபோலவே நல்ல டைரக்டர்களிடம் வேலை செய்தால் நிச்சயம் நன்மை உண்டு என்பதற்கு அத்தாட்சி "குலதெய்வம்" தெய்வ யோகத்தால் குலதெய்வம் படத்தில் என் சுபாவமறிந்த பிரபல டைரக்டர்களான கிருஷ்ணன், பஞ்சு அவர்கள் என்னிடமுள்ள கலையை உன்னிப்பாக உபயோகித்தார்கள். குலதெய்வத்தை பார்த்த எத்தனையோபேர் "என்னம்மா எங்களை அழவைத்து விட்டீர்களே! எவ்வளவு சிரிக்க வைத்தீர்களோ அதற்கெல்லாம் சேர்த்து வாடகை வாங்கி விட்டீர்கள் அழவைத்து" என்றார்கள். இது போன்று பல கடிதங்களும் வந்தன.



ரசிகர்களாகிய உங்களால் பெருமகிழ்ச்சி அடைந்த எனக்கு அதில் பூரண திருப்தி என்று சொல்ல முடியாது அல்லவா? கலை என்ற சமுத்திரத்தில் திமிங்கிலாதி பெரிய பெரிய மீன்களிருக்க நான் ஒரு சின்ன மீன்தான். சிறிய மீனுகவாவது இந்த கலை என்னும் சமுத்திரத்தில் வாழும் படியான பாக்கியம் நான் பெற்றிருப்பதைப்பற்றி மிக்க பெருமிதமே அடைகின்றேன். அப்பாக்கியம் நான் பெற

றிருப்பதற்கும் உங்களைப்போன்ற ரசிகர்களின் நல் ஆதரவுதான் காரணம்.

கலை உலகில் சகோதர பிறவிகள் நாடகமும், சினிமாவும். ஆனல் வேறுபாடுகள் சில காணப்படுகின்றன. நாடகம் தூய்மையான கலை. சிற் சில மாறுதல்கள் காலத்துக்குத் தகுந்தவாறு அக்கலையில் ஏற்பட்டிருப்பினும், அதன் சிறப்பைப் பற்றி சந்தேகிக்கக் கூடியவர் எவருமில்லை. அத்தகைய உயர்ந்த கலையிலும் கலந்துக்கொண்டு, களிப்படைந்து வருகின்றேன். ஆஹா! அதன் அனுபவமே அலாதியானதுதான்! ஆயிரக்கணக்கான மக்கள் முன்பு மேடையில் ஏறி நிற்கும் பொழுது நம்மை அறியாமலேயே உணர்ச்சிகள்பொங்கி, நடிக்க ஆரம்பித்து விடுவோம்! ஆனல் சினிமா என்னும் கலையில் அப்படி அல்ல! நான்கு அல்லது ஐந்து முறைக்குமேல்கூட நடித்து உணர்ச்சிகளை பிரதி பலிக்கச் செய்யலாம்! ஒரு காட்சியில் நடிக்கவேண்டியது பதிவாக சில சமயங்களில் நாள் கணக்கில் நீண்டுவிடும். ஆனல் இதில் ஒரு நன்மை உண்டு! நம்முடைய நடிப்பை நாமே பார்கமுடியும்! குறை ஏதும் தோன்றினலும் மற்றொரு சமயம் அக்குறையை களைந்து விடலாம். ஆனல் எனக்கு இரண்டிலுமே நடிக்க பிரியமாக இருக்கின்றது. கட்டுரை எழுத சந்தர்ப்பம் எனக்கு அளித்ததே ரசிகர்களான நீங்கள் என்னைப் பற்றி அறிய விரும்பியதால்தான்! நானே கலையைப்பற்றி எழுதுகிறேன். உங்களது கோபத்தை இது எவ்வளவு தூண்டிவிடும் என்பதை நான் உணர்வதால் இத்துடன் அதை நிறுத்துகின்றேன். எனக்கு படவுலகத்தைப் பற்றியோ, என்னைப் பற்றியோ, அபிப்ராயம் ஏதும் கிடையாது என்று நான் கூறினல் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்! என்னைப் பற்றி சிந்தித்து பார்த்ததில், சிந்தைக்கு எட்டியவரையில் எழுதுகின்றேன். சங்கீதம் எனக்கு பிடிக்கும் என்று தனிப்பட குறிப்பிட்டு கூறுவதே தவறு என்று கருதுகின்றேன். கொடிய சர்ப்பத்திலிருந்து சகல ஜீவராசிகள் வரை சங்கீதத்தில் கட்டுண்டு நிற்கும் பொழுது, ஆறறிவு படைத்த மனிதர்கள் அனுபவிப்பதைப் பற்றி அறை கூவ வேண்டுமோ? நான் குறிப்பிடுவது சிலோன் சங்கீதத்தையும் சேர்த்து அல்ல! என் இளைய சகோதரிகள் அதைவிரும்பிக் கேட்கும்பொழுது, அவ்விடத்திலேயே இருக்கும் நான் வேறு வழியின்றி அச்சங்கீதத்தையும் என் செவிகளில் போட்டுவைப்பேன். எனக்கு விருப்பம் ஏது என்று கேட்டால் சதா ஒவ்வொரு ஊராக சுற்றிக் கொண்டிருப்பது தான். அதுதான் என் விருப்பமாக இருக்குமென நினைக்கிறேன். ஏனெனில் நாடகங்களில் நடிப்பதை முன்னிட்டு வெளியூர்கள் செல்லும் பொழுது உற்சாகம் எழுவதால்




அதைதான் என் விருப்பமாக கருதி உங்களிடம் கூற வேண்டியிருக்கின்றது. என் ஓய்வு நேரத்தை கழிக்கும் விதத்தைப் பற்றி அறிய விரும்புவீர்கள். சாதாரணமாக பெண்கள் கைவேலைகள் ஏதாவது செய்துக் கொண்டே இருப்பார்கள் பொழுது போக்கிற்காக. அம்மாதிரி ஏதாவது ஒன்றை பார்க்கும்படியாக நேரிட்டால் அதைப் பற்றிவிவரமாக அறிந்துக் கொள்ளுவதே என் வழக்கம். ஆவலும் சிரத்தையும் அதில் அதிகமாகச் செல்லுவதால் எனக்கு ஓய்வு நேரம் என்று ஒன்று கிடைத்தால் அம்மாதிரியான வேலைகளைதான் என் கரங்களுக்கு கொடுப்பேன் என கருதுகிறேன்.

உங்கள் அன்புமாறுமல் என்றென்றைக்கும் என்னை கலையுலகில் முன்னேறும்படி ஆசி கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

---

**ஒரு நற்செய்தி**

அடியிற்கண்ட **புதிய** வெளியீடுகளும் பலகாலமாகக் கைவசமில்லாதிருந்த புத்தகங்களின் **மறு பதிப்புகளும்** தயாராகயிருக்கின்றன. தங்களது தேவைக்கு எதிர் பார்க்கிறோம்

**புதிய வெளியீடுகள்:**

**வை. மு. கோ வின்**

தென்னாட்டுக் கல்யாண முறைகள் அணா 12

**வை. மு. ஸ்ரீ யின்**

ஸ்ரீகோதாஹ்ருதயம் அல்லது
ஸ்ரீகிருஷ்ணப்ரேமா அணா 12

# நான் கண்ட அமெரிக்கா

ஆதூரி

நீயூயார்க் என்னும் பெயரை எழுதும் பொழுதே அந் நகரில் காணப்படும் பல அரிய பொருள்களும், உயர்ந்த சுக வாழ்க்கையை அளிக்கும் நவீனங்களும் நினைவில் எழுகின்றன. ஆனால் முதல் முதலில் தோன்றுவது, நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்ததான ஆகாயத்தை தொடும் கட்டிடங்கள் தான். ஆகா! அந்த கட்டிடங்களின் மாடிகள் எண்ணிக்கையில் நூறுக்கு மேல் கடந்துவிடுகின்றன. சிறு குழந்தைகள் ஏதாவது ஒரு பொருளைப் பேசும் பொழுது, உதாரணமாக ஒரு பொம்மையைப் பற்றி தங்களுக்குள் பேச்சு எழும் பொழுது, "நான் மானத்தை (ஆகாயம்) தொடும் அளவுக்கு பொம்மை வைச்சிருக்கிகேனே" என்று பெருமையுடன் பேசுவதை கேட்டிருக்கிறோம். அந்த மாதிரியாக இந்த நியூயார்க் வாசிகள் தங்களுடைய அழகிய கட்டிடங்களைப் பற்றி பெருமையாக பேசிக் கொள்ளும்படியான பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். கூச்சலும், கூட்டமும் ஒரு இடத்தில் நிறைந்து காணப்பட்டால் சென்ட்ரல் ஸ்டேஷனை உதாரணமாகக் காட்டி பேசுவோம். ஆனால் இந்த நியூயார்க் நகருடன் ஒப்பிட்டால் நம் சென்ட்ரல் எவ்வளவோ மடங்கு அமைதி நிறைந்தது என்றே கூசாமல் கூறுவார்கள்.

இங்குள்ள பெரிய கட்டிடங்களுள் ஒன்று ராக் பல்லர்ஸ் (Rockpellers Building). இது உயரத்தில் மட்டும் இல்லாமல் மற்ற விதங்களிலும் பெரிய கட்டிடம். ஏன்? இரண்டு கட்டிடங்களின் நடுவே இருக்கும் ரோடு கூட இவர்களைச் சேர்ந்ததே. ஆனால் இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் ரோடுக்கு அடியில்கூட கட்டிடங்கள் கட்டியிருக்கிறார்கள். எங்களுடன் வந்த வழிகாட்டி (கைடு) அங்கு நின்று எங்களுக்கு விவரித்துக் கொண்டிருந்தார். திடரென்று நாங்கள் தெருவை அடைத்துக் கொண்டு நிற்பதாக கூறி நகரச் சொல்லி விட்டார். மெல்ல தலை அசைத்த நாங்களும் குழப்பத்துடன் அவ்விடத்தை விட்டு விலகி வந்தோம். இவ்வாறே ஒவ்வொரு கட்டிடத்தையும் வியக்கத்தகும் முறையில் அவர்கள் கட்டி இருப்பதை கவனித்தால், இந்த கலை அவர்களுக்கு எவ்வளவு சாதாரணமாக இருக்கிறது என்றே நினைக்கத் தோன்றுகிறது.

நீங்கள் பிராட்வே என்னும் தியேட்டரைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள்! "சரிதான்! கேள்விப் பட்டிருப்பதா? அதில் ஓடும் சினிமாவைக் கூட சமீபத்தில் தான் பார்த்து விட்டு வந்தேன்" என்றுகூட நீங்கள் கூறுவீர்கள். ஆனால்

நான் கூறுவது நம் சென்னையிலிருக்கும் பிராட்வே அல்ல. ஒரே பெயரை உடையதாக இருந்தும் பல விஷயங்களில் நம் பிராட்வேயை விட மாறுபாடுகள் உடைய நியூயார்க் பிராட்வேயைத்தான் குறிப்பிடுகிறேன். இதை அங்கு ரேடியோ சிடி ஹால் (Radio City Hall) என்று கூட குறிப்பிடு கிறார்கள். இந்த தியேட்டர் ராக்பெல்லர் கட்டிடத்திற்கு அருகாமையில்தான் இருக்கிறது. இதன் உயரம் 80 அடி. சுமார் ஐயாயிரம் மனிதர்கள் ஒரே சமயத்தில் நிகழ்ச்சிகளை கண்டு களிக்கும்படியான வசதி வாய்ந்தது. அந்தக் கட்டி டத்தின் அமைப்பைக் காணவேண்டியே ஓர் இரவு அந்த கொட்டகைக்குச் சென்றேன். அங்கு சென்று உட் கார்ந்தது தான் தாமதம். சூழ்நிலையையே மறந்தேன். நிகழ்ச்சிகள் அவ்வளவு உயர்தரமாக அமைந்திருந்தது என்று அர்த்தமல்ல, மாய மந்திரங்கள் நிறைந்த உலகில் இருக்கிறோமோ என்று நாமே ஐயுறும்படியாக அந்த மேடையினில் நடந்த திடீர் மாற்றங்களே காரணம். அமெ ரிக்காவிலேயே பெரிய மேடையான இதில் முதலில் வாத்ய இசை நடந்தது. ஒருவர் ஆர்கன் (Organ) என்னும் வாத் யத்தை இசைத்தார். நம் கண் முன்பாகவே திடீரென்று அவர் மறைந்தார். அந்த அதிர்ச்சியிலிருந்து நாம் விடுபடும் முன்பு பாண்ட் கோஷ்டி ஒன்று திடீரென்று எழும்பியது. அதற்கு ஏற்ப சுமார் 60 நாரீமணிகள் ஒரே சமயத்தில் பொம்மைகள் அசைவது போல ஆடினர். படிக்கட்டுகள் மாதிரியாக மேடையை பலவித கோணங்களில் தூக்கி நிறுத்தி அவர்கள் நடனம் ஆடியது கண்களுக்கு ஒரு விருந்தாகத்தான் அமைந்தது! ஆனால் எனக்கு மனதிற் குள்ளேயே பயந்தான். எங்கே இந்த அருமையான காட்சி கூட மறைந்துவிடப் போகிறதோ என்று தான்! நான் நினைத்ததற்கு ஏற்ப, அந்த காட்சி மறைந்து சட் டென்று ஒரு திரைமேலே எழும்பியது. அதில் ஒரு நிழற் படக் காட்சியைக் கண்டு களித்துவிட்டுத் திரும்பினேன். பிறகுதான் மேடையை மேலே தூக்கி இறக்கும்படியான வசதி அமைந்துள்ளது என்பது விசாரித்ததில் தெரிய வந்தது.

இந் நகரில்தான் டெலிவிஷனுக்கு படம் பிடிக்கிறார் கள். நம் வீடுகளில் ரேடியோ இருப்பது போன்று அங்கு அனைவருடைய இல்லங்களிலும் டெலிவிஷன் அலங்கரிக் கிறது. ரேடியோ பெட்டியில் திரை இருக்கும். டெலிவிஷ னில் ஸ்டேஷனிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் திரையில் தோன்றுகிறது. ஆகையால் சினிமாவை வீடுகளில் இருந்த படியே பார்க்கலாம். இதைப்பற்றி விவரமாக பிறகு எழுதுகிறேன். இவ்வாறு பல சௌகரியங்கள் உடைய நியூயார்க் அனைவரது ஆசையையும் தூண்டும். ஆனால்

அங்கேயே வசிப்பதானல் ஒரு நிமிடம் கூட ஓரிடத்தில் நிலைத்து நிற்க முடியாது. நிச்சயமாக ஓடிக்கொண்டுதான் வாழ்க்கையைக் கழிக்க வேண்டும்.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனுக்குச் செல்ல நியூயார்க்கிலிருந்து ரோடு வசதியுள்ளது. இதன் மூலமாக பஸ்ஸில் பிரயாணம் செய்யலாம். எல்லா ஸ்டேட்களுக்கும் செல்லும் க்ரேஹௌட்ஸ் (Greyhoud's) என்னும் பஸ் இருக்கிறது. ஹாரனின் உதவியில்லாமலே பாதசாரிகளை தனது "லொட லொட" சப்தத்தினல் விரட்டும் பஸ்ஸின் நினைவு தான் பஸ் என்றவுடன் உங்களுக்குத் தோன்றும். இங்கே இருப்பது அந்தமாதிரி யான பஸ் அல்ல. வெளியில் உள்ள சீதோஷ்ணம் அதனுள் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளை பாதிக்காதவாறு காப்பாற்றும் பஸ்கள் நிறைந்து காணப் படுகின்றன அங்கே. ஒவ்வொரு பஸ்ஸிலும், உட்கார வசதி இருப்பதுடன் அல்லாமல்,கைகால் முகம் சுத்தம் செய்து கொள்வதற்கும், அலங்கரித்துக் கொள்ளுவதற்கும் பிரத்யேகமான அறையும் காணப்படுகின்றது. இந்த பஸ் ஹட்சன் என்னும் நதியடியில் நிர்மாணிக்கப் பட்டுள்ள ஒரு ரோடு வழியாகச் செல்லுகிறது. இது ஒரு அதிசயமான சாதனைதான்!

வாஷிங்டன் நியூயார்க்கிற்கு மிகவும் எதிரிடையாக காணப்படுகின்றது. நகர் மிகவும் அமைதியாக விளங்குகின்றது. கட்டிடங்களும் சாதாரண உயரம்தான். இங்கு தான் அமெரிக்காவின் பிரஸிடெண்ட் வசிக்கிருர். அவர் வசிக்கும் இடத்திற்கே வைட் ஔஸ் (White House) என்று பெயர். இவ்விடத்தில் பல காரியாலயங்கள் காணப்படுகின்றன. நம் இந்தியாவின் அம்பாஸிடர் ஆபீஸ் கூட இங்குதான் உள்ளது இவ்வளவு முக்கியமான காரியாலயங்கள் இங்கு இருந்தும், மிகவும் அமைதியாக இருக்கும் இவ்விடத்தை நினைத்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. ஒரு சமயம் நியூயார்க்கிலிருந்து வந்த காரணத்தால் அவ்வாறு தோன்றியிருக்கலாம். இங்கு பல இந்தியர்கள் வசிப்பதால், நம்மை அதிசயமாக பார்ப்பவர்களே எவரும் கிடையாது. சிலர் நம் இந்திய துணியில் உடை தைத்திருக்கிருர்கள். இங்கு அமெரிக்க முதல்தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் வசித்த வீட்டைப்போற்றி பாதுகாக்கிருர்கள். அந்த காலத்தில் உபயோகித்த சாமான்கள், படுக்கை அறை, சமையல் அறை முதலியன புதிதாகவும், சில பொருள்கள் நாம் உபயோகிப்பது போலவும் இருக்கிறது. அமெரிக்கரின் தேசபற்றை பற்றி அடுத்த இதழில் எழுதுகிறேன்.

---

குறிப்பு:—மோகினி அன்பர்களுக்கு ஸ்ரீ ஆசூரி அவர்கள் உத்தியோக நிமித்தமாக வெளியூர்களுக்கு போக வேண்டி இருந்ததால் சென்ற இதழில் எழுத முடியாமல் போனதற்கு மன்னிக்கவும். ப-ர்




நிமிர்ந்த ரேவதி 'அவ்வளவுதான். இனி போனுல் போல்தான் கிழம் லேசில் விடாது' என்று நினைத்தாளே தவிர, அவரைப் பார்க்காதது போல் நடக்க ஆரம்பித்தாள்.

"ரேவதி! என்னம்மா. பார்த்துவிட்டும் பார்க்காதது போல் போகிருய். நான் என்ன உன்னை வெளியே போக விடாது தடுத்து விடுவேனு? யாரம்மா இவர்கள்? எங்கு போகிருய்?"

"கேள்விகள் அடுக்கடுக்காக இருக்கிறதே. நான் லேடீஸ் க்ளப்பில் சேர்ந்திருக்கிறேன். அங்குதான் போகிறேன். இவர்கள் சிநேகிதர்கள். பார்த்தால் தெரியவில்லையா தாத்தா" —ஏளனமாகச் சிரித்தாள்.

இந்தப் பெண்ணை நயமாகத்தான் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்திருந்த சதாசிவம் அவள் பக்கமாகவே பேசினர்.

"புதியவர்களாக இருக்கவே கேட்டேன். நீ டென்னிஸ்கூட நன்ருக ஆடுவாயா?"

"ஹும்....எனக்குத் தெரியாத விளையாட்டே கிடையாதாக்கும். காலேஜிலேயே நன்ருக ஆடுவேன். இன்னும் இங்கும் சேர்ந்த பிறகு என்னை மிஞ்ச முடியாது. இன்றைக்கு மாட்ச். எங்களுக்கு தான் ஜயம். இதோடு மூன்று தடவை கிளம்பியாகிவிட்டது. ஒரே சகுனத் தடை ஏற்பட்டு விட்டது"

"அட! உனக்கு சகுனத்தில் நம்பிக்கை உண்டா? நாகரீகமாக இருப்பவர்களெல்லாம் இதை நம்புவதில்லையே. சரி போய் ஜயத்துடன் திரும்பு" என்ருர். அவர் பேசிய வார்த்தைகள் ஒன்றும் இதயத்தின் உள்ளிருந்து வந்தது அல்லவே அல்ல.

ரேவதி போகும் போது தன் தோழிகளிடம் "நான் இதுவரை கிழவரிடம் முகம் கொடுத்தே பேசமாட்டேன். என் சித்தியும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகிருள். அதனுல் காரியம் ஆகும்வரை எல்லாம் நடிப்புதான்"—இப்

படி கூறியதோடில்லாமல் தெரு என்பதையும் பாராது "ஹா ஹா" என்று அட்டகாசமாகச் சிரித்தாள்.

சதாசிவம் உள்ளே செல்லாமல் கதவருகிலேயே நின்றார். இவரை சற்றும் எதிர்பாராத லக்ஷ்மி சதாசிவத்தைப் பார்த்ததும் ஈட்டி பாய்வதுபோல் திடுக்கிட்டு திணறி விட்டாள். என்ன பேசுவது என்று ஒன்றுமே புரியாது, யோசிக்கவும் தெரியாது விழித்தவாறு நின்றாள். முகத்தில் அசடுக்களை வழிவதோடல்லாமல், பீதியும், பயமும் சேர்ந்த ரேகைபடர்ந்து வியர்வை வெள்ளமாகப் பெருகியது. இதற்கு முன் சதாசிவம் பல தடவை வந்திருப்பினும் லக்ஷ்மியிடம் எதிரில் உட்கார்ந்து பேசியது கிடையாதாகையால் உட்காராது நின்றுகொண்டேயிருந்தார்.

"தாத்தா! அம்மா என்னவோ யோசித்துக் கொண்டிருக்கிறாள். அதனால் இப்போது ஒன்றும் பேசமாட்டாள். நீங்கள் உட்காருங்கள்"—யார் இப்படி பேசுவார்கள்? நீயூஸ்புலடீன் சரோஜா இல்லாது அவளுக்குத் தெரியாது அந்த வீட்டில் ஏதாவது நடக்குமா?—நடக்கலாமா? அவளேதான் அந்தக் குரலுக்குரியவள்.

பதறியவாறு நின்றுகொண்டிருந்த லமிக்ஷமியும், நிலைமையை பூசிமெழுக தன்னை சமாளித்துக் கொண்டு "உட்காருங்கள்" என்றாள்.

"நான் உட்கார அவகாசமில்லை. சீக்கிரம் போகவேண்டும். நான் ஒரே விஷயம் கேட்டு போகதான் வந்தேன். அன்று முத்து மூலம் அனுப்பிய இந்த கடிதம் நீங்களே எழுதியதா? அல்லது நீங்கள் சொல்லி யாராவது எழுதியதா? என்ன விஷயம் என்பதைச் சொல்லிவிடுங்கள் அது ஒன்றுதான் தேவை"—மடமடவென்று கேட்க வேண்டியவைகளைக் கேட்டார்.

லக்ஷ்மிக்கு பதில் சொல்லத் தெரிந்தால்தானே! வியர்வை வெள்ளமாகப் பொங்க குழம்பித் தவித்தாள். பதிலே கூறாமல் சிறிது நேரம் நின்றாள். பிறகு "நான்.... நான்...வந்து...நான்...மேலே வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

"ஏனம்மா! தயங்குகிறாய். மெள்ளமாகச் சொல். ஒன்றும் தவறு, ஆபத்து இல்லை".

"தாத்தா! என்னது. நான் சொல்லட்டுமா?" என்று தன் முந்திரி கொட்டை தனத்தை விடாது முன் வந்தாள்.

இந்த சம்பாஷணை முடிவடைவதற்குள் வெளியில் சென்றிருந்த ரகு 'டாம் டீம்' என்று அட்டகாசமாக உள்ளே நுழைந்தான்.

"ஓஹோ! பேஷ். பழமொழி என்ன நன்றாக செய்து வைத்திருக்கிறார்கள். 'யானை வரும் பின்னே மணி யோசை

வரும் முன்னே' என்பது போல் பெரியவர் உள்ளே இருக்கிறார் என்பதை வாசலில் நிற்கும் காரே எனக்கு அறிவித்து விட்டது. 'போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடே'' என்று எத்தனை சொல்லியும் வந்து நிற்கிறதே. என்ன விஷயம்" என்ற அதிகார தோரணையுடன் ஒலித்தது அவன் குரல்.

"டேய்...ரகு...ரகு...நீ...நான்....வந்து .... எனக்கு....... வந்து" என்று லக்ஷ்மி மறுபடியும் உளறி கொட்டினாள்.

"ஹூ....அம்மாவிற்கு என்ன தத்துவாய் வேறு வந்து விட்டதா போம்மா பத்தாம் பசலி."

"லக்ஷ்மி! நீ சொல்லம்மா பதிலை. நான் சீக்கிரம் போக வேண்டும். பயப்படாமல் சொல்லு."

"அம்மா பயப்படாமல் சொல்ல வேண்டுமா? உங்களிடமெல்லாம் இப்படி பேசக்கூடிய சாதாரண மனுஷியல்ல அவள். நீங்கள் இம்மாதிரி வந்து பேசுவது கூட தவறுதான். இந்த அத்தனை சொத்தும் என் அம்மாவினுடையதும், எங்களுடையதும். உங்கள் ருத்திராட்சர பூனை, வேஷமெல்லாம் எத்தனை நாள் பலிக்கும். ஒரு நாள் அம்பலமாகாது இருக்காது. என் அம்மா வாயைத் திறக்க மாட்டாள். எது வேண்டுமோ நான் பதில் சொல்லுகிறேன்."

"டேய்! ரகு... பேசாமல்... இரு...எனக்கு" பதறினாள் லக்ஷ்மி. பதறினால் என்ன? கதறினால்தான் என்ன? இப்போது தான் ரகுவின் காதில் எதுவுமே விழாதே.

சதாசிவம் ஒன்றுக்கும் பதில் கூறவில்லையே தவிர உள்ளுக்குள் ஏளனமாகச் சிரித்தவாறுதான் நின்றிருந்தார்.

ரகு பதில் சொல்கிறேன் என்றதால் மறுபடியும் "இந்த கடிதம் யார் எழுதியது என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும்" என்றார் சதாசிவம்.

"அம்மாவால் எழுத முடியவில்லை. அம்மா சொல்லி நான்தான் எழுதினேன். அவ்வளவுதானே" என்றான். தனக்குத் தெரிய வேண்டிய விஷயம் தெரிந்ததும், விடுவிடென்று போய்விட்டார் சதாசிவம்.

லக்ஷ்மிக்கு மயக்கம் வந்து விழுந்துவிடுவாள்போல் நிலைமை மோசமாய்விட்டது. அப்படியே 'தடால்' என்று சோபாவில் விழுந்தாள். இதைப்பார்த்த சரோஜா 'ஐயோ' என்று வீரிட்டாள்.

'ஏய் எதற்கு கத்துகிறாய். அம்மாவிற்கு என்னவந்து விட்டதுகேடு'' என்று நகர்ந்த ரகுவை பார்த்த லக்ஷ்மி சிங்கம் கர்ஜிப்பதுபோல் "ஏய் ரகு! நில்" என்றாள்.

இந்த சிம்ம கர்ஜனையைக் கேட்ட ரகுகூட சிறிது கலங்கிவிட்டான் என்றால் அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? 'அம்மா என்றும் இப்படி கத்த மாட்டாள். அதுவும் நம்மை ஏன் இப்படி கூப்பிடுகிறாள்' என்ற கலக்கத்துடன் லக்ஷ்மியின் எதிரில் போய் நின்றான்.

பயத்தால் நடுநடுங்கி மயக்கம் வரும் நிலையில் அவள் இருந்தாலும், ரகுவின் நடத்தையினால் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்டுவரும் துன்பங்களை எண்ணி அவன்மீது வந்த ஆத்திரத்தில் அவளது பலம் பன்மடங்காகமாறி அவளைக் கூக்குரலிட செய்துவிட்டது.

"என்னம்மா அப்படி கத்தினாய். என்ன விஷயம். அந்த கிழம் எதற்காக வந்தது'' என்று சாவதானமாக கேள்விகளை விறகு அடுக்குவதுபோல் அடுக்கினான் ரகு.

"ஏய் ரகு! இன்னொரு தடவை அவரை மரியாதையில்லாமல் அந்த கிழம், அது, இது என்றெல்லாம் பேசினாயானால் என் கோபம் கட்டுமீறிவிடும். ஜாக்கிரதை''

"அட! நான் நினைத்ததில் ஒரு அணு அளவுகூட தவறு இடையாது. அம்மாவிற்கு ஏதோ கொஞ்சம் அதில் கோளாறுதான் ஏற்பட்டிருக்கிறது. கிழத்தின்மீது இன்று என்ன அப்படி திடீரென்று மரியாதை, அன்பு எல்லாம் சேர்ந்து வெள்ளம்போல் ஓட ஆரம்பித்துவிட்டது. அம்மா! நீ எக்கேடாவது கெட்டுப்போ. ஏதோ உன் பணம் பறிபோகிறதே, அப்பாவும் இல்லாது திண்டாடுகிறாயே, பாவம் என்று எண்ணி உதவி செய்ய வந்தால், தானாக வருகிற ஸ்ரீதேவியை உதைத்து தள்ளுவதுபோல் தள்ளுகிறாய். எனக்கு என் அக்கரை! அம்மா கொஞ்சம் யோசி"

"எனக்கு யோசிப்பதற்கு இனி ஒன்றும் கிடையாது. எல்லாம் தீரயோசித்து ஒரு முடிவிற்கு வந்துதான் பேசுகிறேன். நீ எனக்கு புத்தி சொல்லவேண்டிய அவ்வளவு மோசமான நிலைக்கு நான் இன்னும் வரவில்லை. முத்துவின் குடும்பத்தைக் குலைத்து கொந்தளிக்க வைத்தாகிவிட்டது. இவ்வளவு பெரிய மனிதரிடம், இருப்பது போதாது இன்னும் இழிவான கெட்டபெயர் வாங்கிவைக்க யத்தனிக்கிறாய். என்? வாங்கி வைத்தே ஆகிவிட்டது. நமக்காக பாடுபடும்......''

"ஹூம். சொல்லம்மா. இதை அப்படியே எழுதினால் கட்டுரையாகுமா? நாவலாகுமா?... நமக்காக பாடுபடுகிற பெரியவராமே. எத்தனைபாடுபட்டு, எவ்வளவு நன்மைசெய்து சலித்துவிட்டார் பாவம். உனக்கும் அவரிடம் நன்றி கடன் மலைபோல் ஏறிவிட்டது. அந்த ரஞ்சனை கைக்குள் போட்டுக்கொண்டு ஆட்டிவைக்கிறது போதாது. ஒரு

பத்தாம் பசலிக்கு ஜோடியும் சேர்ந்தாகிவிட்டது. இனி நன்ருக உருப்பட்டுவிடும் வீடு. அம்மா! மரியாதையாகப் பேசச்சொன்னயே. ஹூம். இந்த ரகுவின் திருவாய் ஒரு போதும் அடங்கி பேசாது நினைவிருக்கட்டும். அதுவும் அந்த கிழத்தினிடம். தள்ளாடிக்கொண்டே, தள்ளாத வயதில் வந்தாரே மகான் என்ன முக்கியமான விஷயம் கேட்டார் உன்னிடம்"

"அவருக்கு மரியாதைவைத்து பேசாத வாய்க்கு, அவர் கூறிய விஷயத்தைக் கேட்கமட்டும் முடியுமோ? உன்னைப்போல் அவர் கர்வம் பிடித்தவர் இல்லை. அன்று நீ எழுதி கொடுத்தனுப்பிய கடிதத்தைப் படித்துவிட்டுதான் வந்திருக்கிருர். அந்த கடிதம் யார் எழுதியது என்று அறிந்துபோகவே வந்தார்."

"அட! கிழத்திற்கு அதில்கூட சந்தேகம் எற்பட்டுவிட்டதோ. அப்படியென்ருல், ஏதோ ஒரு மூலையில், ஒரு கடுகளவு மூளை இருக்கிறது. சபாஷ். அடியில் கொட்டை கொட்டையாக லக்ஷ்மி அம்மாள் என்று கையெழுத்து இருக்கையில் குற்றபுக்தியைப்பார். நீ ஒரு பத்தாம் பசலி, அதனல் உன்னை ஆட்டிவைக்கலாம் என்ற முன்யோசனையுடன் வந்திருக்கிறது. ஒன்றும் சாயவில்லை பாவம். இந்த ரகு இருக்கும்வரை ஒருவரும் அணுகமுடியாது. கல்தா தான்"—என்றுகூறி அவனது வழக்கமான அட்டகாச சிரிப்பை வெளியிட்டான்.

"ரகு பேசாதே. அவருக்கு மூளை யிருக்கிறதோ இல்லையோ. அதைப்பற்றி கவலைபட நீயார்? உன்னைப்போல் பல தீயபழக்கங்களில் வல்லவராகதான் அவர் இல்லையே தவிர, மற்றவற்றில் குறைந்து விடவில்லை. பெரிய படிப்பு படித்து ஒரு சட்ட நிபுணராக இருந்தார் என்பதை நினைவு படுத்திக்கொள். நம் குடும்பத்தையே தலையால் தாங்கும் மனிதரை இப்படி கண்டபடி பேசினல், எனக்கு வரும் கோபத்தில் என்ன செய்வேன் என்றே எனக்குத் தெரியாது. அவரை கல்தா கொடுக்க நீ இந்த வீட்டின் அதிகாரியல்ல. நீ அப்படி நினைத்தால் உனக்குதான் இங்கிருந்து கல்தா கிடைக்கும்"—ரகுவின்மீது நீறுபூத்த நெருப்பாக இருந்த ஆத்திரம், அவன் பேசிய வார்த்தைகளால் கிளறி விடப்பட்டு தகதகவென நன்ருக எறியத் தொடங்கியது. வார்த்தைகள் பொறிபோல் வெடிக்க ஆரம்பித்தன.

"சட்டம் படித்து ஊராருக்கெல்லாம் சட்டநிபுணராக இருந்தவர், நம் குடும்பத்தைத் தலையால் தாங்கி சட்டம், செலுத்த வந்திருக்கிருர். அவர் தலையால் தாங்கி நம் தலையெல்லாம் கவிழ்க்கப் போகிருர். போம்மா எக்கேடாவது கெட்டுபோ."

"நான் கெட்டுபோகிறேன். அந்த கடிதத்தில்என்ன எழுதியிருக்கிருய் என்பதை மறைக்காமல் கூறிவிடு என்னிடம் காண்பிக்காமல் ஏதோ சூதுசெய்து நீ அனுப்பியிருக்கிருய் என்று தெரிகிறது. பெரிய விஷயம் இருக்கவே தான் அவர் நம் வீடேறி வந்திருக்கிருர். ரகு! என்வயிற்சலை கிளப்பாதே சொல்"

"ஹூம்... சொல். என்ன எழுதிவிட்டேன். எல்லாம் நீ கூறியதைதான் எழுதினேன். மிளகாய் என்றுவாயால் கூறும்போதே 'உஸ்' என்பதுபோல், அந்த கிழம் வந்து என்ன சொல்லிவிட்டுபோனது என்று நீ இப்படி ஆடுகிருய். நான் எழுதியதை கூறவேண்டிய நிர்பந்தமே கிடையாது. எல்லாம் உனக்குத் தெரிந்ததுதான்."



"ஹூம், நான் ஆடுகிறேன். ஆடுவேன், பாடுவேன், குதிப்பேன். என் நிலேக்கு அதுஒன்றுதான் குறைந்துவிட்டது. ரகு நீ சொல்லவே வேண்டாம். எனக்கு விஷயம் அறிய அதிக நேரம் பிடித்துவிடாது. போ.என்னேடு பேசாதே"

'நீயே பூனே வாயில் அகப்பட்ட எலிபோல் அப்போது கத்தி ஏன் கூப்பிட்டாய்" என்று சீட்டியடித்தவாறு, ஏதோ சினிமா பாட்டை முணுமுணுத்துக் கொண்டே, அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். மாடிக்குச் சென்ற ரகுவின் சிந்தனே பூராவும் தன் தாயை எந்த வழியில் திருத்தலாம், கிழத்தை எந்த வழியில் மடக்கலாம்.' என்றே அலேந்து கொண்டிருந்தது.

இத்தனே நேரம் நாடகம் பார்ப்பதுபோல், வாயை பிளந்தவாறு இவர்கள் சம்பாஷணேயைக் கேட்டுக்கொண்டிருந்த சரோஜா, தன் அம்மாவின் அருகில்வந்து "அம்மா! ஏன் இப்படி மூச்சு வாங்குகிறது. என் அந்த ரகுவோடு கத்தினுய். எத்தனே சொன்னுலும் அதன் மூளேயில் ஏறதே. ஏதாவது உனக்குச் சாப்பிடவேண்டுமா. மூத்துவை

யாவது கூப்பிடுகிறேன்" என்றவாறு அவள் எழுந்திருப்பதற்கும், அங்கு முத்து தற்செயலாக வருவதற்கும் சரியாக இருந்தது.

முத்துவைப் பார்த்த லக்ஷ்மிக்கு குப்பென்று வியர்த்து கொட்டியது. ஆவேசம் வந்தவளைப்போல், ஆனல் ஒரு வித பரிவோடு "முத்தூ! முத்தூ!" என்று அழைத்தாள்.

கடந்த சில மாதங்களாக லக்ஷ்மி தன்னை இப்படி கூப்பிட்டறியாததால் முத்துவிற்கு திகைப்பும், வியப்பும் மேலிட்டது. அந்த வியப்பில் 'என்னம்மா' என்று கேட்கக் கூட மறந்து வாயைப் பிளந்தவாறு ப்ரமித்து நின்றுப் விட்டான்.

இவன் நிலையைக் கண்டு புரிந்து கொண்ட லக்ஷ்மிக்கு அவமானமாய்தான் இருந்தது. 'இந்த வேலைக்காரனிடம் என்ன அவமானம்? நாம் இத்தனை நாளாக அவனை அன்பாக அழைக்காது கேவலப்படுத்தி விட்டு, இன்று அன்பாக அழைத்தால் அவனுக்குச் சந்தேகம் தோன்றுவது சகஜம்தானே. நாமே பேச்சை ஆரம்பிப்போமா? வேண்டாம் அவன்தான் முதலில் கேட்கட்டும்,' என்று பலவாறு நினைத்து முடிவு கட்டினளே தவிர, ரகுவின் மீது ஏற்பட்ட ஆத்திரத்தில்—உண்மை விஷயத்தை அறிய ஆவலினல்—தன்னைக் கட்டுப் படுத்தமுடியாது, தனது அந்தஸ்த்தையும், கௌரவத்தையுமே ப்ரதானமாக மதிக்கும் லக்ஷ்மி அம்மாள், மறுபடியும் "என்ன முத்தூ! பதில் பேசாது நிற்கிருய்" என்று பரிதாபக்குரல் கொடுத்தாள்.

இளகிய மனதுடைய முத்து வியப்பின் மிகுதியால் தான் செய்ததவறை நினைத்து துணுக்குற்ருன். 'பாவம் கணவன் போன துக்கத்தில் இருப்பவர்கள். அதோடு பிள்ளையும், பெண்ணும் படுத்தும் பரிபவத்தினல், துக்கத்தினல் நொந்தவர்கள். ஸ்திர புத்தியில்லாது மனத்தை அலையவிடும் வர்க்கத்தில் சேர்ந்தவர்கள். ஏதோ நம்மை துன்புறுத்தினல் அதை பெரிதாக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் ஜாக்ரதையாக நடந்து கொள்ளும் நான் இப்படி பேசாது நின்றுவிட்டேனே. நம்மை என்ன நினைத்து வருத்தப்பட்டார்களோ' என்ற எண்ணங்கள் புயல்போல் அடித்தன

நாம் கூறும்போது பெரியதாகத் தோன்றுகிறதே தவிர, இவ்வெண்ண அலைகளெல்லாம் முத்துவின்மனதில், ஒரே விநாடியில் பளிச்சிட்ட மின்னல்கள்தான்.

தன் குழப்ப விடுதியை விட்டகன்று, லக்ஷ்மியோடு பேசும் பவனத்திற்கு அவன் மனது தாவி குதித்தது.

"பேசாது என்னம்மா வந்துவிட்டது, என்ன விசயம் சொல்லுங்கம்மா"

"முத்து! நான் கேட்கிறேன் என்று தவறாக நினைத்துக் கொள்ளாதே. ரகு சதாசிவத்தின் வீட்டுக்கு உன்னிடம் கடிதம் கொடுத்து அனுப்பினனே அதைப்பற்றி பேச தான் கூப்பிட்டேன்...—" இப்படி கூறி நிறுத்தினாள்.

"நான் எதையுமே இதுவரை தப்பா நெனச்சது கிடையாதுங்க. இனி மேலும் நினைக்க மாட்டேன். என்ன விஷயமோ. எனக்குத் தெரிஞ்சத சொல்றேனுங்க"

"இப்போ சிறிது நேரம் முன்னே சதாசிவம் வந்திருந்தாரே உனக்குத் தெரியுமா?"

"நான் கவனிக்கில்லீங்களே பின்புறம் இருந்தேன். ரேவதிதான் அதன் சிநேகிதிங்களோட என்னவோ கையிலே மரக்கட்டைமாதிரி எடுத்துகினு போச்சு பார்த்தேன்"

"ஹூம். அவள் ஒன்று எனக்காக வாய்திருக்கிறாள். இத்தனை நேரம் எவ்வளவோ சொல்லியாயிற்று.என்னையே எதிர்த்துபேசிவிட்டு போய்விட்டாள். அந்த கவலை இருக்கவே இருக்கிறது. நீ அன்று கொண்டுபோய் கொடுத்த கடிதம் நான்தான் எழுதினேனா என்று கேட்டுப் போகவே வந்தார்"

"என்னைகூட அன்று கேட்டாரம்மா. எனக்கு ஒரு விசயமும் தெரியாதுன்னுட்டேன்"

"முத்து உண்மையைச் சொல்கிறேன். நான் அந்த கடிதம் எழுதவும் இல்லை. இப்படி எழுது என்று விஷயமும் சொல்லவில்லை. இந்த ரகுவோடு என்ன செய்வேன். அவனே ஏதோ எழுதினான். ஏமாற்றி அனுப்பிவிட்டான். அதில் என்ன எழுதியிருக்கிறான் என்று இப்போதுகூட எனக்குத் தெரியாது. மனசுபுண்படும்படி ஏதாவது எழுதியிருக்கிறான் போலிருக்கிறது. இல்லாவிடில் அவ்வளவு பெரியவர் வருவாரா?"

"நெனச்சது நிசமாயிட்டதே. அவருதான் எழுதிணரா. ஏம்மா உங்களையே மதிக்காது, ஏமாற்றிவிடுகிற பிள்ளையை யார் எப்படியம்மா திருத்த முடியும்? ஏதோ ஆண்டவன் புண்ணியத்திலேதான் அவருக்கு நல்ல புத்தி வரணும்"

"முத்து! நீ எனக்கு ஒரு வேலை செய்யவேணும். உன்னை எத்தனை துன்பப்படுத்தி இருக்கிறேன். ஆனாலும் உன்னால் எனக்குக் காரியம் ஆகவேண்டி இருக்கிறது. சதாசிவத்தின் வீட்டிற்குப் போய் 'இந்த கடிதம் எழுதியது அம்மா இல்லையாம். அம்மா சொல்லியும் ரகு எழுத

வில்லையாம். அம்மாவிற்குத் தெரியாது, ஏமாற்றி தானே எழுதி அனுப்பிவிட்டானும் ரகு. கடிதத்தில் என்ன விஷயம் இருக்கிறது என்றுகூட அம்மாவிற்குத் தெரியாதாம். ஏதாவது தவருக இருந்தால் மன்னித்து விடும்படியும்', சொல், பிறகு ரகு என்ன எழுதியிருக்கிருன் என்பதையும் கேட்டு வா''

"நான் வேண்டுமானுல் அந்த கடுதாசியையே வாங்கியாந்துட்றேம்மா. ஐயா வந்திருக்கும் போதே நீங்க இங்கு இந்த விஷயத்தை சொல்லிபுட்டிருந்தா தண்டாவே இல்லையேம்மா"

"பாவி ரகு இருக்கிருனே என்னையோ அவரையோ பேசவே விடாது கத்திஞன். வாயைத் திறக்க முன்வந்தால் அடிக்க வருகிருப் போல் அதட்டினுன். அந்த சூழ்நிலையில் என்ன பேசுவது என்றே எனக்குத் தெரியவில்லை முத்து!"

"நீங்க கவலைப் படாதீங்கோம்மா. நான் போயி எல்லா விஷயமும் அறிஞ்சிகிட்டு வந்துட்றேன்."

"ஏம்மா நானும் முத்துவோடு போயி நடந்த கலாட்டாவைச் சொல்லி கடிதத்தையும் வாங்கி வந்துடறேன்.— என்று தன் யோசனையையும் வெளியிட்டாள் சரோஜா.

"சரோ! நீ பெரியவர் விஷயத்தில் தலையிடாதே போ. வாஸுவைப்பாரு. சமர்த்தாக இருக்கிருன். முத்து! நீ போய்விட்டு வா அப்பா'' என்று அவனுக்கு விடை கொடுத்தனுப்பினுள்.

முத்துவும் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். அவன் பின்னுலேயே வாயில்வரை சென்ற சரோஜா, "முத்து! முத்து! இனி உனக்கு ஒரு குறையும் இல்லை. நல்ல காலம் பிறந்துவிட்டது குடுகுடு. பிடித்த சனி ஓடிவிட்டது'' என்று கூறி குதித்தாள்.

"என்னம்மா நல்லகாலம்" என்று சரோஜாவின் வாயைக்கிளறிய முத்துவிற்கு "ஏய்! தெரியாதா உனக்கு. அம்மாவே உன்னேடு அன்பா பேசரு. இனிமேல் ரகு, ரேவதி பேசினுல் என்ன, பேசாவிட்டால் என்ன? அதை தான் சொன்னேன்'' என்று சளைக்காமல் பதில் சொன்னுள்.

"அம்மா! அப்படி பேசக்கூடாது. எனக்கு என்னிக்கும் நல்ல காலம்தான். சரி நீ உள்ளே போ'' என்று மெள்ள சரோஜாவை உள்ளே அனுப்பினுன்.

'ஏதடா! நல்லகாலம். சரோஜா இம்மாத்தம் கொயந்தே அது எப்படி பேசுது! அம்மா என்ன திடீர்னு மாறிட்டாங்க. இந்த குணமே நிலைக்கணுமே. அம்மா

ளின் பச்சோந்தி மனதை நினைக்கும்போது இறக்கமும் ரகுவின் பயங்கர உள்ளத்தை நினைக்கும்போது நடுக்கமும் தான் ஏற்படுகிறது' என்ற சிந்தனைகள் கருமேகக் கூட்டங் கள்போல் சூழ முத்து நடந்து கொண்டிருந்தான்.

## அத்தியாயம் 12.

### வேலையின் விபரீதமும், ஏளனத்தின் எதிரொலியும்

"ரேவதி! எழுந்திரு. என்ன இதற்கே இப்படி இடிந் துபோய் உட்கார்ந்து விட்டாய். நாம் என்ன இதுவரை ஜெயிக்காதவர்களா? நம் திறமை யாருக்கும் தெரியாதா? இன்று நம் வேலை சரியாக இல்லை. அதனால் தோற்று விட்டோம். வா பார்ட்டிக்கு. எதிர் கட் சியவர்கள் அதுவும் நம்மைத் தோற்கடித்தவர்கள்—வைக் கும் பார்டிக்குப் போகாவிட்டால் அவர்கள் நம்மை கேவல மாக நினைப்பார்கள். நாம் போகாதிருப்பதும் அநாகரீகம். ஹூம் வா" என்று க்ளப்பில் நடந்த போட்டியில் தோல் வியுற்ற வகுப்பினர்கள், அவர்களில் ஒருத்தியான ரேவ தியை பலவாறு தேற்றிக் கொண்டிருந்தனர்.

யார் ஆறுதலும் ரேவதியின் செவியில் புகாது காற்ற லைகளோடு கலந்து கொண்டிருந்தன. 'ஐயோ! நாம் போட் டியில் வெற்றி பெறுதலால் நம் சபதம் மடிந்து விட்டதே' என்ற எண்ணமும், இதைக்கேட்டு சதாசிவமும், லக்ஷ்மி யும், முத்துவும், ஆஹ்ஹா என்று சிரிப்பது போலும், பல சூறவளி போன்ற உணர்ச்சிகள் எழுந்து அவள் நெஞ்சை அம்பால் குத்தி சித்திரவதை செய்வது போல் இருந்தது. செதுக்கிய சிலையாய் அமர்ந்திருந்தாள்.

இருந்தாலும் "ப்ரேம்! எனக்குப் புறப்படும் போதே தெரியும் நம் ஆட்டத்தின் முடிவு என்ன ஆகும் என்று. சகுனத்தடை ஏற்பட்டதே. சனியன் பிடித்த முத்துவும், அந்த தொந்தி கிழமும் வந்ததுகளே. நான் ஜம்பமாக அவர்களிடம் கூறிவிட்டு வந்தேனே. இப்போது அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்" என்று படபடத்தாள்.

"தூ! என்ன ரேவதி! சுத்த கர்நாடகம் போல் பேசுகி றாயே. சகுனமாவது, தடையாவது, தெய்வம் உண்டு என்று அதற்குத் தாளம் போடும் பித்துக்குளிகள்தான் சகுனம், அது, இது என்று பிதற்றும். நீகூட அந்த பித்துக்குளி களின் வகுப்பைச் சேர்ந்தவளா? கடவுளாம் கண்மூடியாம்.

உலகமே இயற்கையின் சக்தியால் இயங்குகிறது, நாம் ஆட்டத்தில், வெற்றிபெறுவதும், தோற்பதும் நம் கையில் இருக்கிறது. இன்று அவர்கள் ஊக்கத்துடன் ஆடினர்கள். நாம் ஏதோ விளையாட்டாக இருந்துவிட்டோம். அது தான் காரணம்'' என்று ஒரு நாஸ்திக நாரீமணி தன் கருத்தை வெளியிட்டாள்.

இவள் இப்படி கூறியதும் ஒவ்வொருவரும் நாஸ்திக ஆஸ்திகத்தைப் பற்றி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடலாயினர்.

"நீ அப்படி சொல்வதும் சரியில்லை. கடவுள் இருக்கிருரோ, இல்லையோ? சகுனம் என்பது மட்டும் பொய்யல்ல. அது எனக்கு எத்தனையோ, நல்லதிலும் சரி, கெட்டதிலும் பலித்திருக்கிறது. நாங்கள் கிளம்பும்போது ஏற்பட்ட சகுனத்தால்தான் இத்தனை கலவரங்களும்''

"ஏன் நாம் முதலில் கிளம்பும்போது வேலைக்காரன் முத்து வந்தானே அது நல்லது. அப்போது ரேவதி மறுத்துவிட்டாள். அதன் பிறகுதான் கெட்ட சகுனம். முதலில் வந்திருந்தால் கட்டாயம் வெற்றி நமக்குதான். முத்துவின் மனதும் நல்லதுதான்.''

"கல்லு கடவுள்தான் நமக்கு வாழ்வில் சகலத்தையும் செய்கிறது என்பது உங்கள் மூட எண்ணம். ஹூம். கடவுள் இருந்தால், அதையே நம்பும் ரேவதி ஏன் தோற்று போகிருள் சொல்லுங்கள்''—என்று சாமர்த்தியமாககேட்டு விட்டதாக எண்ணிஞள் ஒருத்தி.

"ஆஹஹ்ஹா! உனக்குத் தெரியவில்லை அதன் காரணம். நம் குழுவில் நாங்கள் கடவுள் என்று ஒருவர் இருக்கிருர் என நம்புகிருேம். ஆனல் அதிலேயே உங்களைப் போன்ற சிலர் கருத்து வேறுபாடு உடையவர்களாய் இருந்ததினல்தான் தோற்ருேம் என்று நான் நினைக்கிறேன்.''

"சரி. சரி இது விளையாட்டாக ஆரம்பித்து சண்டையாக முடியப்போகிறது. நான் ஒன்று சொல்கிறேன் அதன்படி எல்லோரும் நடக்கலாம். ரேவதி பாவம்.... தோற்றுவிட்டதால் நம் சபதம் நிறைவேருது ஆகிவிட்டதால் வருத்தமாயிருக்கிருள். அதனல் நம் குழுவினர்களுக்குள்ளேயே ஒரு ஆட்டம் ஆடலாம். அவர்களுக்குள் ரேவதி வெற்றி பெற்று விட்டால் அவளுக்குத் தெம்பும் சந்தோஷமும் ஏற்படும். என்ன? வாருங்கள் பார்ட்டியை முடித்துக்கொண்டு அவர்கள் போனதும் ஆட்டத்தைத் துவக்கலாம்.'' என்று பொதுவாகக் கூறியவளின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அனைவரும் பார்ட்டி நடக்கும் இடத்திற்குச் சென்றனர்.

பார்ட்டி முடிந்ததும் முன் ஏற்பாட்டின்படி ரேவதி குழுவினரில் ஒருத்தி—அதுவும் ரேவதியின் அந்தரங்க சிநேகிதிகளில், ஒருவளான சாந்தியின் நடனம் ஆரம்பமாயிற்று. பெரிய பணக்காரரின் செல்வப் புதல்வியான அவள் பெரிய வித்வானிடம் பயின்று அனைவரையும் களிப்புக்கடலில் ஆழ்த்தினுள். ரேவதி உள்பட மயங்கி விட்டனர் என்ற பிறகு வேறு என்ன வேண்டும்!

"ஒன்ஸ்மோர் சாந்தி!"

"எக்ஸலென்ட். ஏ ஒன்".

"பேஷ்! பலே!" போன்ற வார்த்தைகள் மாறிமாறி எழுந்து அக்கட்டிடத்தையே ஆனந்தத்தால் ஆட்டிக் கொண்டிருந்தது. சாந்தியின் சிவந்த சாயம் பூசியவெண் பாதமும், ராக தாளத்திற்கேற்ப நிர்தனமாடிக்கொண்டிருந்தது.

ரேவதியும் தன் உயிர் தோழியின் திறமையைக்கண்டு வியந்தாள். சாந்தியைத் தன் வீட்டிற்கும் அழைத்துச் சென்று ஒரு நாள் ஆட வைத்து, தன் ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என அவள் உள்ளம் துடி துடித்தது.

ஒன்றன்பின் ஒன்ருக நடனம் முடிந்து, ரேவதி குழுவினர்கள் ஏற்பாடுசெய்திருந்த ஆட்டமும் மறந்தது. ரேவதியின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. இதிலிருந்தே அவள் ஆட்டத்தில் தோல்வியுற்றதை மறந்துவிட்டாள் எனத் தெரியவில்லையா? என்ன சந்தோஷமாக வெளிக்குக் காணப்பட்டாலும் ரேவதியின் மனதில் ஏதோ ஒரு ஏக்கம் இருந்து அவளை அழுத்திக்கொண்டே இருந்தது.

ரேவதியும் அவள் சிநேகிதிகளும் தெருவில் வந்து கொண்டிருக்கும் போது ரகுவைச் சந்தித்தனர். ரேவதி பேசாது நடந்து கொண்டிருந்தாள்.

விசில் அடித்துக்கொண்டே வந்த ரகு, ரேவதியின் முகத்தைப் பார்த்துவிட்டு, "ரேவதி! ஏன் என்னவோ போல் இருக்கிருய்? மாட்சில் யாருக்கு வெற்றி? உனக்குத் தானே?" என்று கேட்டுவிட்டு, ரேவதியின் சிநேகிதிகளை கண்ணேட்டம் விட்டான்.

ரேவதி அவன் கேள்விக்கு பதிலே கூறவில்லை. அதற்குள் ஒரு பெண் "எங்களுக்குத்தான் வெற்றி, ரேவதிதான் ஜெயித்தாள்„ என்ருள்.


உடனே ரேவதியை, கோபமும், வெறுப்பும் வந்து கவிந்தன. "ரகு! நானும் வெற்றிபெறவில்லை எங்கள் குழுவினரும் வெற்றி பெறவில்லை. அவள் சொல்வது

தப்பு. நானே வருத்தமாக இருக்கையில் நீ வேறு ஏன் கிளறுகிறாய்'' என்று அவனைச் சுட்டெறித்தாள்.

"ரேவதி! ஏன் அப்படி சொல்கிறாய்? நம் தோல்வியை மற்றவர்களிடம் ஏன் தெரிவிக்க வேண்டுமென்று பொய் கூறினேன். அது தப்பா?'' என்ற கேள்வி ஒரு பெண்ணிடமிருந்து எழுந்தது.

"ஹூம். வெளியாரிடம் தோற்றுவிட்டது. பொய் கூறி ஏன் ஜம்பமடித்துக் கொள்ள வேண்டும்? அதில் தோற்றோம். நம் சபதமும் நிறைவேறாது போய்விட்டது பின் என்ன வேண்டும்''

"சபதமா? அது என்ன ரேவதி!''—என்று தன் சந்தேகத்தை நிவர்த்திக்கக் கேட்டான் ரகு. அதற்குள் ரேவதியின் சிநேகிதிகள், சைகைமூலமும், 'ரேவதி! சொல்லாதே', என்றும் கூறி ரகு அவ்விஷயத்தை அறிந்து கொள்ள முடியாதவாறு செய்துவிட்டனர். ரகுவின் முகத்தில் அசட்டுக் களை சொட்ட அவர்களையேப் பார்த்தவாறு நடந்தான்.



சிநேகிதிகள் பிரிந்து சென்றதும், ரேவதியும் ரகுவும் வீட்டையடைந்தனர். வழியிலும் ரேவதி ரகுவோடு பேசவில்லை. நேராகச் சென்றரேவதி தன் அறையிலுள்ள நாற்காலியில் 'தொப்' பென்று உட்கார்ந்தாள். ரகுவும் ரேவதியின் செய்கையைப்பற்றி விசாரிக்க அவளைப்பின் தொடர்ந்தான்.

"ரேவதி! ஏன் இப்படி இருக்கிறாய். என்னோடு பேசகூட உனக்குப் பிடிக்கவில்லையா?"

'நம் முகத்திலுள்ள குறிகளை ரகு கண்டு கொண்டுவிட்டானே. நாம் ஏதாவது சாக்குதான்சொல்லி விடவேண்டும். இல்லாவிடில் குடைந்து குடைந்து அவன் கேட்கும் அடுக்கடுக்கான கேள்விகளுக்கு யார் பதில் சொல்வது" என்ற தீர்மானத்துடனேயே பேச ஆரம்பித்தாள்.

"ரகு! உன்னோடு பேசாது எனக்கு என்ன வந்துவிட்டது. எனக்கு தலையை ரொம்ப கனக்கிறது. அதனால் தான் களைப்பாய் இருக்கிறது."

"இந்த ஆட்டத்தில் தோற்றதற்கே நீ இப்படி சோர்வடைந்துவிட்டாயே. இது என்ன ப்ரமாதம். வேறு க்ளப்போடு ஆடி வெற்றி பெற்றுவிடுங்கள். ரேவதி! என்னவோ சபதம் என்றாயே அது என்ன. எனக்குச் சொன்னாயானால் நான் உதவிசெய்து அதை நிறைவேற்றி வைக்கிறேன்."

"என்னை அதைமட்டும் கேட்காதே. நான் கூறவே மாட்டேன். நான் கூறிய விஷயம் தெரிந்தால் என் சிநேகிதிகள் க்ளப்பிலிருந்தே விலக்கி விடுவார்கள். சரி ரகு! வேறு விஷயம் பேசுவோம்" என்று அவனை வேறு பேச்சில் திருப்ப தெம்பாக எழுந்திருந்தாள்.

"ரகு! நாங்கள் கிளம்பும் போது நம் எதிராளிதான் வீட்டோடு இருக்கிறானே, அதிர்ஷ்டகட்டை மூத்து. அவன் தான் வந்து தொலைந்தான்.

"ஹூம். இப்போதுதான் புரிந்தது நீங்கள் தோற்றதின் காரணம். சற்று உட்கார்ந்து விட்டுப் போவது தானே"

"உட்கார்ந்துவிட்டுதான் கிளம்பினேம். இரண்டாவது பூனையும், மூன்றாவது அந்த கிழமும் வந்ததுகள். ரகுகூட வீட்டிலில்லையே. சித்தியை என்ன ஆட்டிவைக்குமோ அது? என்று நினைத்து பயந்துகொண்டு போனேன்"

"பயமே வேண்டாம் ரேவதி. இம்மாதிரி தம்பி இருக்கையில் உனக்கு என்ன குறை? கிழம் வந்த சிறிது நேரத்தில் நானும் வந்துவிட்டேன். நான் எழுதி அனுப்பினேனே சுடச்சுட, பாணக் கட்டுரை, அதைப் பார்த்து விட்டு, கரணம் அடித்து தொந்தியைத்தடவிக் கொண்டு ஓடி வந்தது கிழம்"

"ஹ...அதுதானு விஷயம். என்னுடனும் ஏதோ இளித்துக்கொண்டு பேச வந்தது. நானு பேசுகிறவள். சரி சித்தி ஏதாவது உளறி கொட்டினுளா? நீ என்ன சொன்னுய்?"

"அந்த பத்தாம் பசலி உளறி கொட்டதான் வாயைத் திறந்தது. நான் அடக்கி நன்ருக அந்த கிழத்தை உலுக்கிவிட்டேன். அதன் சிண்டை பிடித்து ஆட்டாதது தான் பாக்கி. கடிதம் எழுதியது அம்மாதானு? இல்லேயா? என்று சந்தேகம் வந்துவிட்டதாம். அதை அறிந்து போகவும், மேலும் ஏதாவது பணத்தைப் பிடுங்க வழி செய்யவும், யாரும் இல்லாத சமயம் பார்த்து வந்தது நான் வருவதைப் பார்த்ததும் திணறி திண்டாடிவிட்டது."

"ரகு! நாம் யாரும் வீட்டில் இல்லே என்று எப்படித் தெரியும். இந்த முத்துதான் போய் சொல்லி அழைத்து வந்திருக்க வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"அதைப்பற்றி இப்போது கவலே இல்லே. சரியான வழி செய்வேன். ரேவதி உங்கள் க்ளப்பில் பார்ட்டி ஏதாவது உண்டா? என்ன நடந்தது என்று எனக்குச் சொல்லவே இல்லேயே."

"பார்ட்டி. பிறகு சாந்தியின் பரத நாட்டியம் ப்ரமாதமாக இருந்தது. அவளே ஒரு நாள் நம் வீட்டிலேயே ஆட வைக்கலாம் என்று தீர்மானம் செய்திருக்கிறேன்."

"பேஷ்! ரேவதி! ஒரு சந்தோஷச் செய்தி சொல்லப் போகிறேன். நீ கேட்டு அப்படியே அயர்ந்துவிடப் போகிருய்."

"என்ன! சந்தோஷச் செய்தியா? சீக்கிரம் சொல். சொல்."

"உம். நான் உனக்கு ஒரு நல்ல காரியம்,—உதவி செய்யப் போகிறேன். அதற்கு பதில் நீ எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். அதாவது என் சிநேகிதன் ஒருவன் இருக்கிருன். லக்ஷாதிபதிகளுக்கு ஒரே பிள்ளே அவன். அவனிடம் படிப்பு, அழகு, குணம் எல்லாம் ஒன்ருகக் குடிகொண்டிருக்கின்றன. அவன் நான் எது சொன்னுலும் தட்டமாட்டான். அவனே உனக்கு... என்ன?...."

"என்ன ரகு! உனக்கு....என்ன?...என்ருல் என்ன அர்த்தம்? விளங்கச் சொல். ஏதாவது மழுப்பி என்னே ஆபத்தில் மாட்டி விடாதே. நான் ஏதோ உனக்கு உதவி செய்ய வேண்டும் என்ருயே அது...என்ன?"

"ஏன் ரேவதி! இப்படி படபடக்கிருய். உதவி எல்லாம் சொல்வதற்குள், கேட்பதற்குள் அவசரப் படுகிருயே. உன்னே எந்த ஆபத்தில் இதுவரை மாட்டி வைத்திருக்கி

183206

றேன். மாட்டிதான் விடுவேனு. என் அக்காவை அப்படி செய்வேனு? சொல்வதை நிதானமாகக் கேள். என் சிநேகி தன் என்று கூறினேனே அவனைக் கல்யாணம் செய்துக் கொள்ள ஆயிரக்கணக்கான பெண்கள் போட்டி போடு கின்றனர். ஆனல் அவன் ஒன்றிற்கும் பிடி கொடுக்க வில்லை. நான் ஒரு வார்த்தை சொன்னேனுனல்...தட்ட வே மாட்டான். உன்னை அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்துவிடுவேன்."

"கல்யாணமா? வேண்டாம் ரகு. ரஞ்சன் என்னிடம் ஊருக்குப் போகும்போது 'நீ அவசரப்பட்டு யாரையும் மணந்துவிடாதே. நான் ஊரிலிருந்து வந்த பிறகு நான் பார்த்து செய்து வைக்கிறேன்' என்று கூறிவிட்டு போயி ருக்கிறன். அவனையும் எதிர்த்துக் கொண்டு, சித்திக்கும் தெரியாது நாமே அதிகப்ரசங்கித் தனமாக வேலை செய்யக் கூடாது"

"ரஞ்சன் சொல்லிவிட்டுப் போனனும். போ ரேவதி நீ மேலுக்குப் பார்ப்பதற்கு நாகரீகமாக இருக்கிறயேத் தவிர, நாகரீகத்தில் இருப்பதுபோல் செய்கையிலும் சமூ கத்தை எதிர்த்துக் கொண்டு முன்னேருமல் பயப்படும் கோழையாக இருக்கிறயே. உனக்கு என்ன வயதாக வில்லையா? சிறிய குழந்தையா? எனக்கே கல்யாணமாகும் வயதாகிவிட்டதே. அப்படி இருக்கையில் நீ கல்யாணம் செய்துக் கொள்ளாமல் நான்கு வருடத்திற்கு பிறகு வரப் போகும் ரஞ்சனை எதிர்பார்த்திருந்தால் உன் கல்யாணத் தையும் தர்ட்டி பூர்த்தியையும் ஒன்ருகக் கொண்டாட வேண்டியதுதான். அதுவும் ரஞ்சன் ஊர் திரும்புகிருனே அல்லது அங்கேயே ஒரு வெள்ளைக்காரியோடு தங்கி விடுகி ருனே. நான் என்ன அம்மாவிற்குத் தெரியாது நடத்து கிறேனு. உன் சம்மதம் பெற்றதும், அம்மாவிடமும் சொல் வேன். நன்ருக யோசித்துச் சொல். உனக்கு அம்மாதிரி கணவன் கிடைப்பது மிகவும் கஷ்டம்."

"........."

"என்ன ரேவதி பேசாமடந்தை போல் இருக்கிறய்! ஒரு வார்த்தை 'சரி' என்று சொல் முதலில் அம்மாவிற்குத் தெரியவேண்டாம். ஒரு பெரிய ஹோட்டலில் விருந்து ஏற் பாடு செய்து உன்னையும் அவனையும் சந்திக்க வைக்கி றேன். பிறகு சபா, சினிமா இப்படியாக சிநேகம் செய்து கொண்டு காரியத்தை முடிக்கலாம்.

"ரகு! என்னை இந்த ஒருவிஷயத்தில் மட்டும்வற்புறுத் தாதே. வயதானல் ஆகட்டும். இது ஒன்றிலாவது ரஞ்சன் இஷ்டபடி நடந்து விடுகிறேன். ரஞ்சன் திரும்பும்வரை என் கல்யாணப்பேச்சே கிடையாது" என்றுமிடுக்காய் எழும் தாள். அவள் குரலில் தொனித்த தீவிர உறுதியைக்கண்டு ரகு திகைத்தான்.

18326.

# எனது முதல் வெற்றி!

பண்டித திருவாலி ராமானுஜாசாரியார்.

எனது முதல்வெற்றி!—சட்டசபைக்கு என்று எண்ணிவிடாதீர்கள்!...... காப்பி என்னும் பானத்தை எனது 68-வது வயதில் விட்டுவிட்டேன்! எப்படி நேர்ந்தது இது என்று கேண்மின்:

மயிலை, பென்னாத்தூர் சுப்பிரமணியம் உயர்நிலைப் பள்ளியின் பொன் விழா மலர் ஒன்றை அன்புடன் உதவினார் என் அருமை நண்பர் ஒருவர்.

பலசெய்திகளை மிகவும் மனமகிழ்ச்சியுடன் படித்தேன். படங்களையும் பார்த்தேன். ஒரு பக்கத்தில், பி. ஜி. பால் அண்டு கம்பெனியார் (புத்தக வியாபாரிகள், சென்னை) குருவார விளம்பரம் என்னும் விஷயத்தைத் தமது கைங்கரியமாக இதில் வெளியிட ஏற்பாடு செய்திருந்தார்கள். விளம்பரத்தை ஆவலுடன் படித்தேன். இது ஸ்ரீ காம கோடிபீட ஸ்ரீ ஆசாரியசுவாமிகள் அநுமதிபெற்றது என்ற தலைப்புடன் ஸ்ரீ. ம. தர்மத்தொண்டு சபையாரின் அறிக்கை என்றும் கண்டுகொண்டேன். பல அம்சங்கள் அதில் காணப்பட்டாலும் "காப்பியைக்... கவனத்துடன் சிறிது சிறிதாகவாவது குறைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்" என்பதே எனது கவனத்தைக் கவர்ந்தது.

இது ஒருநாள் இரவு படுக்கப்போகும்போது. விடியற்காலையில் பால்காரன் "பால், பால்" என்று அலாரம் செய்ய, நானே எழுந்து அதை வாங்கி வைத்தேன். வழக்கம்போல் காப்பியும் தயார்செய்து என்னிடம் கையில் கொடுத்துவிடவும் பட்டது—ஹா! என்ன? நேற்று இரவு படுக்கப்போகும்போது காப்பி குடிப்பதில்லை என்று சபதம் செய்துகொண்டோமே!—இது என்ன விபரீதம்—பழக்கவாசனை!—என்று, கையில் தீப்பற்றியதுபோல்—ஆனால் அமைதியுடன்—காப்பியைத்திருப்பிக் கொடுத்துவிட்டு எனது சபதத்தைச் சொன்னேன். இதற்குள் வந்துகூடிய பலரும்—இது முடியாத காரியம்—என்றனர். உடனே திருவாராதன அறையில் சென்று பகவான் திருமுன்பு 'திருத்திப் பணிகொள்ளவேண்டும்' என்று சாஷ்டாங்க தெண்டனிட்டு, எழுந்து அங்குள்ள ஸ்ரீய:பதிமுதல் ஆசாரியபர்யந்தமானவர்களை அஞ்ஜலி ஹஸ்தனாய்த் தொழுதுதொழுது மனவுறுதி தரவேண்டினேன். அன்று அப்போதே விட்டவன்தான்.

இதற்கு மாற்று உண்டோ என்று பேதைமனம் பரிதவித்தது.

அந்த விளம்பரத்திலேயே:—1. சமீப அநுபவத்தில் அரிசி, கோதுமை நொய்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட மோர்க்கஞ்சியைக் கையாண்டால் காப்பிப் பித்துக் குறைந்து விடுகிறது, என்று படித்தேன்.

இருமல், இழுப்போடு இதை எப்படிச் செய்வதென்று தடுமாறினேன்.

நமது ஜகன்மோகினியாரே இடுக்கண்களையவந்தனர்.

சிங்கப்பெருமாள் கோவிலிலிருந்து நிலத்தில் விளைந்த கேழ்வரகு நன்றாக பதம் செய்யப்பட்டு, "ராகி க்ஷீர்" என்று வந்திருப்பதாக மாதிரியாக ஒரு கோப்பையும் கொடுத்தனர்.

காப்பியைவிட்டு "ராகிக்ஷீர்" என்பதைப் பற்றிக்கொண்டேன். இதுதான் எனது முதல் வெற்றி!

[குறிப்பு:—இன்னும் சில அரிய உபதேசங்கள் அடுத்த இதழில் வரும்.]

Jaganmohini (March 1957) Regd. No. . 210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
தணிக் குன்று
ஜீவநாடி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்
ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா
ரூ. 1-2
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா.12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
தியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்
அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை. மு. பத்மினி

ரூ. 1-8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

## சுத்தானந்த பாரதி

காந்தி கீர்த்தனம் 3-8

## ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.